468

[Register]ed No.— M.2492.

உ
சிவமயம்.
தேவி துணை.

KALANIDHI.

A high class Tamil Monthly Journal.

457

கலாநிதி.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

தாய்	சுக்கில-ஸு மார்கழி-மீ	சேய்
1	1929-ஸு டிஸம்பர்-மீ	9

உள்ளடக்கம். பக்கம்

1.	தோத்திரப்பாக்கள்	1
2.	பத்திரிகை	3
3.	ஞானநலப் பகுதி	5
4.	இளமையிற்கல்	8
5.	உபாத்தியாயரின் இலக்கணம்	13
6.	நமது முக்கிய கடமை ...	16
7.	மாதர் நீதி விளக்கம்	18
8.	தேசநலப் பகுதி	20
9.	அபிப்பிராயங்கள்	22
10.	மதிப்புரை	24
11.	பலசரக்கு	25
12.	கலாநிதிச் சேவகன்	26
13.	சாஸ்வத சந்தா நேயர்கள்	28
14.	மதனுபிஷேகம் (நாவல்)	29
15.	தேவி பாகவதம்	63

OFFICE OF THE REGISTRAR
No.
24 APR 1930
MADRAS

பத்திராதிபர் & பத்திராசிரியர் :—
இராம. வயித்தியநாத சர்மா,
தேத்தாகுடி வடக்குச்சேத்தி P. O.,
Via வேதாரணியம்.

12th April 1930.

Edward Press—Tiruvarur.

உ

சிவமயம்.

தேவி துணை.

கலாநிதி.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பத்திராசிரியர்:—இராம. வயித்தியநாத சர்மா.

தாய்	சுக்கில-௵ மார்கழி-௴	சேய்
1	1929-௵ டிசம்பர்-௴	9

விநாயகர் துதி.

கலாநிதியாம் பத்திரிகை காசினியிற் காண்போர்
கலாநிதியாய் நாளுங் களிக்கக்—கலாநிதியாஞ்
சத்தியருள் பெற்றமதத் தந்திமுகத் தெந்தைபதம்
பத்திசெயச் சித்திமிகும் பார்.

தேவி துதி.

அம்மையே யுனதுநக ரெல்லையள வும்பிணிக
ளாயவை சூரி பேதி
அணுகவொட் டாமலதி காரமே செய்துமங்
காவலொடு வீற்றி ருப்பாய்
செம்மைய திலாதசில காலமவை களிலுனது
சீர்நக ரடுத்த பதியிற்
சிறுமைபட வேயந்த தீநோய்க ளணுகிலுன்
சேவடி வழுத்தியே தான்
எம்மையித் தருணமே காத்தருள வேண்டுமென்
றேகமா யபிடேக மும்
ஏரலங் காரமுதல் நைவேத னம்பலவு
மேசாள மாயு னக்கே
வெம்மைதணி யச்செய்து பூதிகுங் குமமிட
விரண்டோடு மன்னேய் கவேள
வேதவன நாதனுறை சூதவன மீதிலுள
வேதவன துர்க்கை யுமையே.

முருகன் துதி.

பங்குனிப் பூரத்தி லங்குபுக ழொடுதனது
பதிவிட் டெழும்பி யேகிப்
பகர்காளி கட்டிஞ்று நகர்மா மடத்தன்று
பரிவுறவி ருந்து மறுநா
ளங்குத்தி ரத்திலகு கங்கையிற் றீர்த்தம
தளித்துமூன் றுகு நாளா
மத்தத்தி லேகாவ டிப்பால தபிடேக
மாகவதைத் யேற்று மறுநா
ளெங்கணும் விளங்கிடப் பொங்குதா ணம்பல
வியற்றியவ ணன்றி ருந்து
மிலகுமைந் தாநாளி லலகில்புக ழோடவ
ணிருந்தெழுந் தருளியே தன்
றிங்களொலி வீசிப்பி றங்குமா லயமுறச்
சேருமுரு காகருணை செய்
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகே சனே. (5)

(திருப்புகழ் மெட்டு.)

சங்கேறு செங்கை கொண்டே கலந்து
சந்தோடு கொஞ்சி —யுறவாடி
சந்தோ டதம்ப லந்தா னுமுண்டு
சம்போக வன்பு —தரவேசெய்
சிங்கா ரமங்கை தப்பா னிரம்பு
சிந்தா குலங்க —ளறமேவுயுன்
செந்தாளி லன்ப கம்பூண வென்று
செந்தூ ரவந்து —மருள்வாயே
கங்கா ளர்தந்த மைந்தா கடம்ப
கந்தா சிலம்ப —கதிர்வேலா
கங்கே யசம்பு பங்கா ளுமங்கை
கண்டே மகிழ்ந்த —குமரேசா
செங்கா லனங்கொ ணஞ்சை யிலங்கு
செஞ்சோ லைதங்கு —கமுகோடு
தெங்கே மிகுந்த வங்கா ளமுந்து
சிங்கார மிஞ்சு —முருகோனே.

பத்திரிகை.

பத்திரிகை அபிவிருத்தியாகாத நாடு, எத்துறையானும் முன்னேறியதாக எண்ணமுடியாது. எந்த நாடு பத்திரிகை படிப்பதில் முன்னேற்ற முற்றிருக்கின்றதோ அந்த நாடு சகல அந்தஸ்திலும் முதன்மை பெற்றிருப்பதாகப் பார்க்காமலே பகர்ந்துவிடலாம். நமது இந்தியாவோ பத்திரிகை விஷயத்தில் பராமுகஞ் செலுத்தியே வருகின்றது. ஆனால் இந்தியாவில் நூற்றுக்குத் தொண்ணூற்று மூன்று பேருக்குப் படிப்பே தெரியாதே! எங்ஙனம் பத்திரிகை வாசிப்பதென வினாவலாம். அக்குற்றமும் யாரால் நேர்ந்ததென ஊகிக்கில், நம்மாற்றானென விடை வரும். எழுத்து வாசனை யுணர்ந்த நூற்றுக்கு ஏழு பேருந்தானென்ன பத்திரிகைகளை யாதரிப்பது? அதுவும் பூரணமாகப் புகலமுடியாது. இங்கிலாந்து முதலிய நாடுகளில் பத்திரிகை அபிவிர்த்தி யடைந்திருப்பதற்கும், நமது நாட்டிற்கும் சீர்தூக்கில், பத்திலொன்றுகூட, பத்திரிகை விருத்தியுற்றதாகப் பகரமுடியா. மேல் நாடுகளில், ஒவ்வொரு பத்திரிகையையும், லக்ஷக் கணக்கான ஜனங்கள் ஆதரிக்கின்றனர். நமது நாட்டில், ஒரு பத்திரிகைகூட அவ்வளவு சந்தாநேயர்களைப் பெற்றதெனக் கூறவியலா. இங்கிலாந்தில், அரசன் முதலாகத் தோட்டி யீறாகவுள்ள அனைவரும் பத்திரிகையைப் போற்றாதாரில்லை. மிக ஏழ்மைத்தன்மையுள்ள ஒரு ஸ்திரீயுங் கூட பத்திரிகை வாங்கி வாசியாதிராள். ஒருவன் வியாதியால் பீடித்துள்ள காலத்திலும், பத்திரிகையைக் கையினின்றும் நெகிழவிடான். அவ்வவர்களின் நித்தியவேலை முடிந்ததும், பத்திரிகையைக் கைப்பற்றிவிடுவார். நமது நாட்டுத் தனவந்தர்களோ, அனாவசியமான காரியங்களில் ஏராளமான பொருளைச் செலவழிக்கின்றனர். பத்திரிகைக்குப் பணம் போடுவதென்றால் பயப்படுகின்றனர். இனாமாகக் கொடுத்தாலும் வாசிக்கவும் பின்வாங்குகின்றனர். தட்டுத்தவறி, பத்திரிகை வாசிக்கவிரும்பியவர்களோ, பணங் கொடுப்பதற்கு அஞ்சுகின்றனர். ஒரு

ஊருக்கு ஒருவருக்கு ஒரு பத்திரிகை வந்தாற் போதும். காசு கொடுத்தவரைக் கண்ணாற் பார்க்கவிடார். இரவலெடுக்க எண்ணற்றோர் வந்துவிடுவர். சமயத்தில் ஆளுக்கொரு காகிதமாகவும் எடுத்துப் போவதுண்டு. இம்முறையாகப் பத்திரிகை பரவினால், எவ்வணம் அபிவிர்த்தியாகும்?

மேல் நாடுகளில், இரவு 9–10 மணி வரையிலும், "பத்திரிகை பத்திரிகை" என்று, பத்திரிகை விற்போனின் கூக்குரல் ஆகாயத்தை ஊடுருவிச் செல்லுமாம். ரெயில் பிரயாணிகள் ஸ்டேஷனுக்குச்சென்றவுடன் ஒரு பத்திரிகை வாங்கிவிடுவார்களாம். அது வாசித்து முடிந்ததும், வேறொரு பத்திரிகை வாங்கிவிடுவார்களாம். எவ்வளவு ஏழ்மைப்பட்டவர்களும் தினமொன்றுக்கு, 4, 5 பத்திரிகையாவது பார்க்காதிருக்கமாட்டார்களாம். அதிக வேலையுள்ளவர்கள் நாளொன்றுக்குக் குறைந்தது ஆறு பத்திரிகையாவது வாங்கி வாசிக்காமல் பொழுதைப்போக விடார்களாம். புதிது புதிதான பதிப்புப் பத்திரிகைகளை வாங்க வேண்டுமென்று பேரவாக்கொள்வார்களாம். சிறிது நேரத்திற்கு முன்பு நடந்த சமாசாரங்களும் உடனுக்குடன் அச்சிட்டு வெளிவருமாதலால், காலை 8 மணிக்கு வாங்கிய ஒரு பெயருள்ள பத்திரிகையை மீண்டும் 12 மணிக்கும் அதையே வாங்கும்படி நேருமாம். ஒரு, ஓய்வு தினங்களில் நாளொன்றுக்கு பதினைந்து, இருபது புதிய பெயருள்ள பத்திரிகைகளையும் வாங்கநேருமாம். இதுபோன்ற நாடல்லவா பத்திரிகை விஷயத்திலும் ஏனைய விஷயத்திலும் முன்னேறியதெனக் கருதப்படும். பத்திராதிபர்களுக்கும் மென்மேலும் ஊக்கமுண்டாகும். நம்மவர்கள், ஒரு வருஷத்திற்கு ஒரு மாதப்பத்திரிகையைக்கூட, வாங்குவதற்கு விழியாகவிழித்து விடுகின்றனர். ஆறு மாதம் படித்த பிறகு வேண்டாமெனத் திருப்புகின்றனர். சிலர் பத்திரிகை படிக்க நேரமில்லையெனக் கூறுகின்றனர். சிலர், விஷயம் விளங்கவில்லையென வோதிவிடுகின்றனர். இத்தகையார் தினப்பதிப்பு, வாரப்பதிப்புள்ள பத்திரிகைகளை எவ்வணம் ஆதரித்து அபிவிர்த்திசெய்ய முன்வரப்போகின்றார்கள்? பத்திரிகை வாசிக்கக் காலங்கிடையாதென்று கூறுபவர்கள், கோர்ட்டு வாயிலில் வறிதே உட்கார்ந்திருக்கின்றனர், வேறுவித வெட்டி வேலையில்

விடாமுயற்சி புரிகின்றனர். காலங்கிடையாதென்றது பொய்யோ மெய்யோ? இத்தகைய குறைபாடுகள் நீங்கி, பத்திரிகை அபிவிர்த்தியில் நமது நாடு என்று கண்ணுங் கருத்துமாக விருக்குமோ, அன்றே நமது நாடு முன்னேற வழிகண்டதாகும். இத்தகைய முன்னேற்ற மார்க்கத்தை, எல்லாம் வல்ல இறைவண் விரைவில் திறந்துவைத்து ஆசி புகல்வாராக. சுபம்!

பத்திராசிரியர்.

ஞான நலப் பகுதி.

(முன் தொடர்ச்சி.)

(மெய்க்குக் கூறியது.)

ஆக்கையாற் பயனென்? அரன்
கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டிப் போற்றி யென்னாதஇவ்
வாக்கையாற் பயனென்?

(கால்களுக்குக் கூறியது.)

கால்களாற் பயனென்? கறைக்
கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்களாற் பய னென்?

விவேகம் நெஞ்சைத் தன்னோடு உளப்படுத்தி யிரங்குதல்.

உற்றார் யாருளரோ? உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றாலத் துறை கூத்த னல்லால் நமக்
குற்றார் ஆர் உளரோ?

நெஞ்:—விவேகமே, நீ பணியிட்ட வேலைகளை யெல்லாம் செய்யும்படி எனது அடிமைகளை வேலை வாங்குகின்றேன். திருவடியைச் சார்வோமென்றுமே! அங்ஙனஞ்செய்தால்

பிறவித்துன்பம் நீங்கும் என்றாயே! யான் எவ்வளவோ கெட்ட காரியங்களைச் செய்திருக்கும் பாவியாகிய எனக்கும் நற்கதி யளிக்குமோ!

விவே:—ஆஹா! நீ திருவடித்தாமரையின் மேன்மையை அறிந்தாயில்லை; அவற்றின் வள்ளன்மையை நோக்குமிடத்துப் பாரியையும், பேகனையும், கர்ணனையும், அரிச்சந்திரனையும் வள்ளல்கள் என்று கூறுவது உபசாரவழக்குப்போலும். திருவடிகள் தம்மையடைந்தோர்க்கு உடனேயே அருளைப் பொழிகின்றன. ஏழையென்றும் பணக்காரனென்றும், அறிவாளியென்றும் அறிவிலியென்றும், பாவியென்றும், தர்மாத்மாவென்றும், பக்குவனென்றும், அபக்குவனென்றும் கருதுவதில்லை; யாம் எவற்றை வேண்டுகின்றோமோ அவற்றையெல்லாம் தரும். ஆதலின் அவற்றைப் போயடைதலைவிடச் சிறந்த பேறு இல்லையென்று அறிதி. ஆதலின் நெஞ்சமே குருபானுக்கு அடிமைசெய்து அவரது அருளைப்பெற்றுத் திருவடியைச் சீக்கிரம் அடைவாயாக. ஐயோ! உன்னைப்பார்த்தால் மிகப்பரிதாபகரமாக இருக்கின்றது. காலை அஞ்சுமணி முதல் இரவு பத்துமணி வரையிலும் மிக உழைக்கின்றனை. நீ உழைப்பதைக் கவனித்துப் பார்க்குமிடத்து உன்னை யொரு கழுதைக்கு ஒப்பிட்டுக்கூறலாம். வண்ணான் கழுதைகூட உன்னைப்போல் உழைக்கவில்லையே. இரவிலும்கூட தூங்குகின்றாயில்லையே! மனைவிமக்களாகிய பெருஞ்சேற்றிலகப்பட்டுத் திண்டாடுகின்றனையே! நான் மிகவும் வருத்தப்படுகின்றேன்.

நெஞ்:—விவேகமே, நீ நன்கு சொல்லினை; உனக்கு ஒருவரும் வேண்டியதில்லைபோலும். தலைவலித்து நாலுநாளைக்குப் படுத்துக்கொண்டால் நமக்கு உதவி வேண்டியதில்லை. ஆளைத் தேடி ஆஸ்தியைத்தேடு என்று சொல்லக் கேட்டதில்லையோ? ஒருவனுக்குப் பணங்காசு இல்லாவிட்டாலும் மனுஷாள் வேண்டுமென்று கூறக்கேட்டிலையோ?

விவே:—ஓகோ! ஆபத்துக் காலத்தில் துணையாவார்களென்றோ மனைவி மக்களுக்குக் கிடந்துழைத்தனை! செய்யாத பாவங்களையெல்லாம் செய்தனை! பொருளீட்டுதலிலேயே

கருத்துக்கொண்டனை ! சற்காரியங்களிற் செல்லக் கூசினை. உன் கருத்தை நன்கறிந்துகொண்டேன். கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்து நமது ஆயுட்காலம் முழுதும் தொலைந்தவிடத்து இயமனா லனுப்பப்பட்ட ஒலையும் தூதரும் வந்தால் இந்த மனைவி மக்கள் நமக்குத் துணையாவார்களோ ? இயம தூதர்களோடு சண்டைசெய்து அவர்களை விரட்டிவிடுவார் களோ ? ஆராய்ந்து கூறிதி.

நெஞ் :—விவேகமே ! இதில் ஆராயவேண்டிய தென்ன இருக்கிறது. 'கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை' என்றபடி இயமனை மிஞ்சியவர்கள் ஒருவருமில்லை. மிருகண்டு புத்திரனான மார்க்கண்டேயன் சிவாராதனையின் மகிமையால் கூற்றங்குதித் துய்ந்தான் என்று புராணங்கூறுகிறது. அதைத்தவிர வேறெவ ரும் கூற்றங் குதித்துய்ந்தாரில்லை. தபோபல மிருந்தாலும் திரவியபல மிருந்தாலும் உறவினர்பலமிருந்தாலும் மற்றெந்தபல மிருந்தாலும் இயமனைமிஞ்சமுடியாதென்பதுயாவர்க்குந்தெரிந்த விஷயம், அந்த ஒரே காரணத்தினாற்றான் ஆஸ்தீகத்தை ஒப்புக் கொள்ளவேண்டியிருக்கிறது. மரணத்தைப் போக்க வேதத்தில் மந்திரமும் இல்லை. வைத்தியத்தில் ஒளஷதமும் இல்லை. எப்பேர்ப் பட்ட மகிமை வாய்ந்தவர்களும் இறப்பை நீக்கமுடியாது. மனு மாந்தாதியோரும், தேவரினும் சிறப்புவாய்ந்த எவ்வளவோ அரசர்களும் இறந்திருத்தல் காவிரியாற்றின் மணலினும் பலவே யன்றோ ? இதனாலன்றோ, நாலடியாரில்,

> " மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
> தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
> துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
> எஞ்சினா ரிவ்வுலகி லில்."

என்றார் ஆன்றோரும். ஆதலின் நீ கூறுவது உண்மையே. ஆனால், என்னைத் துணையென்று நம்பி என்னுடைய ஆதாவில் இருந்து வருகின்ற மனைவிமக்களை என்ன செய்வேன்? அவர்க ளுக்கு உண்டியும் உடையும் யார் அளிப்பார்கள் ? அதனால் தயங்குகின்றேன். என்மேற்குற்றம் உளதோ ஆராய்ந்து கூறுதி.

விவே :—நெஞ்சமே ! நீ கூறுவது சரியன்று ! அக்கருத்து உனக்குப் பேதமையாற் றோன்றியதாகும். நீ நன்கு ஆராய்ந்து

பார்க்கவில்லை. உன்னை இயமதூதர்கள் பற்றிச்சென்று விடுவார்க ளானால் இயமனிடத்து விடைபெற்றுவந்து உன் மனைவிமக்களைக் காப்பாற்றுவாயோ! உனக்கும் அவர்களுக்கும் உண்மையிற் சம்பந்தமில்லை யென்பதை யுணர்ந்தாயில்லை. அதனாற் றிருவடி யை மறந்தேனென்றாய்! உனக்கும் அவர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை யென்பதை நன்றாய்க் கருத்துட்கொண்டு கூத்தாடி நாடகமாடுவதுபோல் சகல காரியங்களையும் செய்வா யாக. பண்ணையில் வேலை செய்கிற காரியஸ்தன் மாவுக்கு ஐந்து கலம் விகிதம் விளைந்தபொழுது கண்ணீர் விடுவதும், பதினைந்து கலம் விகிதம் விளைந்தபொழுது ஆனந்தக் கூத்தாடுவதும் உண் டோ? அதுபோலவே எண்ணிக்கொண்டு சகல காரியங்களையும் செய்தி; ஒன்றிலும் பற்றுதல்வேண்டாம்; திருவடியிலேயே பற்றுதலிருக்கட்டும். அது எல்லாவுயிர்களுக்கும் அரிய துணையா கும். உன்னையும் உன் மக்களையும் காப்பாற்றும், அதுவன்றி உனக்கு அவர்களும், அவர்களுக்கு நீயும் துணையாவதெங்ஙனம்? ஓர் உயிருக்கு மற்றோர் உயிர் துணையாகமாட்டாது.

(தொடரும்)

இங்ஙனம்,

S. KUPPUSAMY AIYER.

இளமையிற்கல்.

ஆலங்காடு K. S. மீனாக்ஷிசுந்தரஞ் செட்டியார் அவர்கள் எழுதியது.

நீர்புடை சூழ்ந்த நீணில மாந்தர் நீதிநெறிக்கண் நிற்பான் வேண்டி, ஆண்டினுங், கல்வியினும், அறிவினும், அன்பினும், ஆன்ற புகழினும், "பங்குக்கு மூன்று பழந்தால் வேண்டும் பனந்துண்டமே" என்பன போன்ற் அருட்கவி பாடுந் திறத்தா னும் ஆற்றல் சான்ற நம் ஔவை மூதாட்டியார் அன்புகூர்ந் தருளிய அறமுதலாய நாற்பொருள் பயக்கும் அமுத மொழிகள் பல. அவற்றுள், "இளமையிற்கல்" என்பதூஉம் ஒன்றேயாம்.

இளமையிற்கல் என்பது இளமையில்+கல் என்னும் இரண்டு பதங்களாலாய ஒரு பொருளாகும். இதன் பொருள், இளமையில்=(நீ) இளமைப் பருவத்தே, கல்=(கல்வியைக்) கற்பாயாக என்பதாம். இதினின்றும் எண்ணரிய பிறவிகளுள் ளெடுத்தற்கரிய இம் மனிதப் பிறவியை யெடுத்த நீ, இம்மையில் பெறுதற்கரிய அறம், பொருள், இன்பங்களையும் பெற்று, மறுமையில் அடைதற்கரிய பேரின்ப வீட்டினையும் அடைதல் வேண்டும். அங்ஙனம் இருமையினும் பெருமையினை அடைய வேண்டுமேயாயின், அதற்குத் துணையாக நிற்பது கல்வியே யாகலின், கற்றற்கரிய கல்வியைக் கற்றற்குரிய இளமைக் காலத்தே கற்றல்வேண்டும். இஃதே அத் திருவாக்கின் பொருளாகும் என்பது நன்கு புலனாகிறது. ஈண்டிதனைச் சிறிது ஆராய்வாம்.

கடிகையி னளவைக் காண்பிக்கும் ஓர் கடிகாரமானது, புதிதாக வாங்கப்பட்ட காலத்தில் கடிகையி னளவை நன்கு காண்பிக்கின்றது. சின்னாட் சென்றுழி, பல் வில் முதலிய கருவிகள் பலவீனமுற்று, கடிகையி னளவைக் காண்பிக்குஞ் சக்தியற்றதாகின்றது. மேலும், கூரிய முனையோடு கூடிய ஓர் பேனாவானது, புத்தப் புதிதில் எழுத்துக்கள் நன்கு எழுதுகின்றது. சின்னாட் சென்றபின்னர், இரிடியமற்ற அஞ்ஞான்று அது எழுதுஞ் சக்தியற்று விடுகிறது. அன்றியும், வேகமாகச் செல்லும் புதிதான ஓர் மோட்டார் வண்டியில் நாம் பிரயாணஞ் செய்வோமேயானால், குறித்த இடத்திற்குக் குறித்த நேரத்தில் கூடிய விரைவிற் செல்வதோடு தேகத்திற்குஞ் சுகத்தைத் தருகின்றது. நாட்செல நாட்செல அது கட்டை வண்டியைப் பார்க்கினுங் கடகடத்து, வேகமும் மிக்குக் குறைவுற்று, ஆகத்திற்குஞ் சுகவீனத்தை அளிக்கின்றது. இவைபோல, இரத்தம், தோல், மேதை, இறைச்சி, சுவேதநீர், மச்சை, எலும்பென்னும் எழுவகைத் தாதுக்களாலாய இவ்வுடலின் றத்துவக் கருவிகளும் என்றும் ஒரே தன்மை யுடையனவாக விளங்குவ தின்று.

“ இட்டமிகு மிளமைநல மீரையாண் டதனில்
இருபதினில் வளர்ச்சியுமுப் பதுவருடத் தழகும்
உட்டகைய மேதையுநாற் பதுவருடத் துடலின்

2

ஒண்பலமு மைம்பதினில் அறுபதினிற் ருதும்
திட்டியுமங் கெழுபதினில் எண்பதினிற் செவியும்
திகழ்மனமுந் தொண்ணூறிற் சீவனுநூ றளவில்
விட்டகலு மெனவுணர்ந்த அறிஞர்கள்வா ணுட்கள்
வீணுள்பட் டழியாமல் விரும்புவர்நற் றவமே."

என்று வித்துவ விவேகிகள் கூறிய தத்துவ நூலே சான்ரும். மேலும், நமக்கு இளமைக் காலத்திருக்கும் மனோபலமும், உள்ளக் கிளர்ச்சியும், அறிவுடைமையும் வயோதிகப் பருவம் வந்தகாலை, அஃது வாய்ப்பதில்லை என்பது உள்ளங்கைநெல்லிக் கனி. உதாரணமாக:—ஓர் மரமானது சிறிதாயிருக்குங் காலத்தில், அதனை நாம் நன்கு வளைக்கவும் நிமிர்க்கவுங் கூடும். அது போல, நாம் நமது உடலையும் இளமைக் காலத்தில், எவ்வகைத் தொழிலையும் பழக்கவும் நிறுத்தவுங் கூடுமாகலின், அவ்விளமைப் பருவமே கற்றற்குரிய கல்வியைக் கற்றற்கேற்ற பருவமேயாகும். "பருவத்தே பயிர்செய்" என்னுஞ் சூத்திரத்தினுட்பொருளை ஆராயுங்கால், பயிர்களை அதனதன் காலத்தில், அவற்றிற்குச் செய்யவேண்டிய முயற்சிகளிற் ருழ்க்காது செய்தல் வேண்டும். எனினும் அதனைப் பொதுவகையாக நோக்குங்கால், ஒவ்வொரு தொழிலுடையோருக்கும் உரியதாகக் காணப்படுகிறது. இதனை வலியுறுத்துவான், "பாலப் பருவமே படிப்புக்குத் தகுதி" என்னுந் திருவாக்கும் எழுந்தது.

இளமைப் பருவத்தில் நம் உள்ளமானது, அடுத்தது காட்டுங் களங்கமற்ற பளிங்கினையன்ன விளங்குகின்றதாகலின், அதனை நாம் எவ்வகையிற் செலுத்துகின்றோமோ அவ்வகையில் ஊக்கமாய்ச் செல்வதாயு மிருக்கிறது. இதுபற்றியே ஒவ்வொரு ஜாதியினரும், தததங் தொழிலைத் தத்தம் குழந்தைகளுக்கு மிக்க இளமைப்பருவத்திலேயே கற்பிக்கத் தொடங்குகின்றனர். அந்தணர்கள் தந்தங் குழந்தைகளுக்கு, அதிக விளமைப் பருவத்திலேயே கற்றற்குரிய வேதாத்தியானங் கற்பிக்கின்றனர். அரசர்களும் தங்குல வொழுக்கத்திற்குரிய அரசாட்சி முறை, போர்த்தொழில் முதலியன அரசிளங் குமரர்களுக்கு

அதிக இளமைப் பருவத்தே போதிக்கின்றனர். இதுபோன்று மற்றும் பலான தொழிலாளரும் தங்கடங்கள் குழந்தைகளுக்கு பாலப் பருவத்தே தங்கடங்கள் தொழில்களைப் பழக்குகின்றனர். அம்மட்டோ! நாட்டியக் குதிரை, ராணுவக் குதிரை முதலியன வற்றைக் குட்டியிலேயே பிடித்து அதற்குரிய பழக்கங்கள் போதிக்கப்படுகிறது. மற்றும், கிளி, நாகணவாய்ப்புள் முதலான பறவைகளைக் குஞ்சிலேயே பிடித்துக் கூட்டிலடைத்து வைத்துக்கொண்டு அவைகளுக்குப் பேசக் கற்றுக்கொடுப்போமேயானால் அவைகள், செவிகளுக் கினிய வார்த்தைகள் செப்புகின்றதை இன்றுங் கண்கூடாகக் காண்கின்றனம் அல்லவோ?

மேலும், இளமைப் பருவத்தில் நம் மனமானது இளக்கமாயும், மிருதுத்தன்மை யுடையதாகவும் இருப்பதால், போதிக்குங் கல்வியும் சுகுணங்களும் புத்தியிற் பதிந்து நன்றாய் வேரூன்றிக்கொள்ளுகின்றதோடு வயோதிகப் பருவம் வந்துற்ற காலையும் அவைகள் நம் மனத்தைவிட்டு அகலுவதில்லை. "இளமையிற் கல்வி சிலையி லெழுத்து" என்னுந் திருவாக்கு ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது. அன்றியும், ஆங்கிலேயக் கனவானொருவர் கூறுவதாவது. கள்ளங் கவடற்ற நல் விருப்பங்களையும், தன்னலமற்ற பெருங் கொள்கைகளையும், ஏற்றுவளரும் இளமை உள்ளத்தில், உயர்ந்த லட்சியங்களென்னும் விதையை விதைப்போமேயானால், பின்னர் அது தனிப்பெரு நலனாக விளைதல் கூடும். மற்றும், என். ஸி. எப். ஆண்ட்ரூஸ் துரைமகனார், இளமைப் பருவத்தினரின் மனமானது இளக்கத்தன்மை யுடைதாகலின், இளமைப் பருவமே கல்வியைக் கற்கத்தக்க பருவமாகும். பெரியவர்களான பின்பு அக்கல்வியைப் போதிப்பதாற் பிரயோசனமில்லை. உதாரணமாக, பொன் வெள்ளி முதலிய பஞ்சலோகங்களையும், மெழுகு ஸ்படிகம் முதலானவைகளை உருக்கி இளகியிருக்கும்போது, வேண்டிய கலன்களையும், விக்கிரகங்களையும், பண்டங்களையுஞ் செய்வதுபோலவும், பச்சை மண்ணைக்கொண்டு பல கடாதிகள் செய்வதுபோல்வும், உழுது திருத்தி இளக்கமாயிருக்கிற பூமியில் வேண்டிய தானியங்களை விதைப்பதுபோலவும், இளமைப் பருவத்தே நம் குழந்தைகளுக்கு வித்தையையும், நற்புத்தியையும் கற்பித்தல் வேண்டும் எனக் கூறுவாராயினர்.

நிற்க, முதுமைப் பருவத்திலோ, தேகக் கருவிகள் தளர்ச்சியடையப்பெற்று, சிற்சில வியாதிகளாற் சிக்குண்டு கொள்வதோடு, மனமுதலிய கரணேந்திரியங்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புத்திராசை முதலிய மற்றும் பலான வுலக வழக்குகளாலும், கவலைகளாலும் பீடிக்கப்பெற்று உள்ளக் கிளர்ச்சியும், உறுதியுமழிந்து சஞ்சலத்தன்மை அடைகின்றது. அவ்வித மனத்தில், கல்வி எவ்விதம் பதியும்? களங்கமற்ற பளிங்கியிலன்றோ முகம் விளக்கமாகத் தோன்றும். களங்கமுற்ற பளிங்கியில் முகம் விளக்கமாகத் தோன்றுமா? அழுக்கில்லாத ஆடையே சாயம் நன்றாய்ப் பிடிக்குமே யன்றி, அழுக்குற்ற ஆடை அவ்வாறு பிடிக்குமா? வியாதியுற்ற கிழக்குதிரை வேகமாகப் பாய்வதுண்டோ? அவைபோல, உடற்கருவிகள் தளர்வுறாது ஊக்கமும், உறுதியும், அறிவுடைமையும் மிக்குள்ளதும், உலகப் பழக்க வழக்கங்கள் ஏறாத காலமு மாகிய இளமைப் பருவமே, கற்றற்கரிய கல்வியைக் கற்றற்குரிய காலமேயாகும். அங்ஙனமின்றி, ஒருவன் இளமைப் பருவத்தில், கற்றற்குரிய கல்வியைக் கல்லாது, பந்து, பார், சீட்டு, கோலி, குஸ்தி, சூது முதலான விளையாட்டுக்களையுங் கற்றுக்கொண்டு, இளமைப் பருவத்தை அவமே கழிப்பானேயாகில், அவன் வயோதிகப் பருவம் வாய்த்தகாலை, வாணாள் முற்றும் கண்ணீர்விட்டு வீணே வருந்தத் தக்கவனாவன் என்பது திண்ணம். இதனையே "இளமையைக் கல்லாவளர விடல் தீது" என இன்னா நாற்பதும் இயம்பா நின்றது.

(தொடரும்)

உபாத்தியாயரின் இலக்கணம்.

(முன் தொடர்ச்சி.)

ஆகலான், நம்மவர்கள் சீற்றங்கொள்ளாதிருக்கவேண்டி, மேலே செல்லுகிறேன். தற்காலத்தில் உபாத்தியாயர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களிற் பலர், ஒரு வேலையுமில்லாதவர்களாகவும் மாணவர்களுக்கு நன்கு போதிக்கும் திறமையற்றவர்களாகவும் உலகானுபவம் இல்லாதவர்களாகவும் இருந்துகொண்டிருப்பதால், உபாத்தியாயரென்றால் யாரா யிருந்தபோதிலும் ஜனங்கள் கேவலமாக மதிக்கிறார்கள். அவர்களுக்கு, மரியாதை என்பது கிட்டுதலரிது. 'தடுக்கிவிழுந்தால் பள்ளிக்கூடத்தில் விழவேண்டியிருக்கிறது, பள்ளிக்கூடத்திற்கு என்ன, உபாத்தியாயர்களுக் கென்ன, குறைச்சாலா? பிழைப்பற்றவர்கள்தானே' என்றுசொல்ல நேர்ந்து விட்டது. கிராமங்களில் 'ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயிலாண்டி, அதற்குமிளைத்தவன் பள்ளிக்கூடத்து உபாத்தி, என்ற பழமொழியும் வழங்கிவர ஆரம்பமாயிற்று படிக்காதவர்கள் தாம், இப்படிச்சொல்லுகிறார்களெனின், படித்தவர்களிற் பலரும் உபாத்தியாயரைக் காணில் என்னடா, ட, டா, பேர்வழிதானே என்று இழிவாகப் பேசுகிறார்கள். சாதாரணமாக, ஒரு ஸ்கூல்பைனல் படித்த ஒருவன் வேறு எந்த இலாகாவிலாகிலும் ஒரு குமாஸ்தா வேலை செய்யின், அவனிடத்தில் யாவரும் மதிப்புவைக்கிறார்கள். அதே படிப்புள்ள ஒருவன் உபாத்தியாயராக இருப்பின், ஜனங்கள் அவனிடத்தில் மதிப்பு என்பது மருந்திற்கும் வைப்பதில்லை. அப்படி இருக்க, எவ்வித உதவியை அவர்கள் பெறக்கூடும்? யாதொரு உதவியுமின்றித் தயங்குகிறார்கள். செழிப்பு இல்லாத கிராமங்களிலுள்ள உபாத்தியாயர்கள் ஜனங்களிடமிருந்து அறுப்புண்ட கைக்குச் சுண்ணும்பும் பெறமுடியாது திண்டாடுகிறார்கள். ஜனங்களின் உதவி இப்படியிருக்க கவர்ன்மெண்டின் உதவியை நாடி, கவர்ன்மெண்ட் ஸ்கூலுக்குச் சென்றாலோ, மற்றெந்த இலாகாவிலிருக்கப்பட்டவர்களுக் களிப்பதைக்காட்டிலும் மிகவும் குறைந்த

சம்பளமே கொடுக்கிறார்கள். மானேஜ்மெண்டு ஸ்கூல் வைத் திருந்தாலோ, அவர்கள்பெறும் சர்க்கார் உதவிநிதியோ மிகச் சொற்பமாகும். தனி ஸ்கூலின்றி மானேஜ்மெண்ட் ஸ்கூலில் உபாத்தியாயராக வமர்ந்தாலோ அவர்களின் நிலைமை இன்னும் மிகக் கேவல நிலைமையிலிருக்கிறது. மானேஜர்கள்தான் என் செய்வார்கள்? சர்க்கார்உதவிநிதியும் குறைச்சல். பையன்களிட மிருந்தோ வரும்படியுமில்லை. இவ்விதநிலைமையில், உபாத்தியா யர்கள் ஜீவனோபாயத்திற்குச் சரியான வரும்படி இல்லாது திண்டாடுகிறார்கள். இவ்விடத்தில் ஓர் கதை எனக்கு ஞாபகம் வருகிறது. அதாவது, ஓர் உபாத்தியாயர்தன் ஜீவனோபாயத்திற் காக, ஒரு பணக்கார வீட்டுப்பையனுக்கும் பாடங் கற்பித்து வந்தார். அப்பையனின் தகப்பனார், தன் குழந்தையைப் பாடம் வராதபோனால் அடிக்கக்கூடாதென்றும், அப்படிப் பாடம் வராதபோனால் அவ்வுபாத்தியாயருடைய பிள்ளையைத்தண்டிக்க வேண்டுமென்றும், அதைப்பார்த்துத் தன் பையன் படிக்க வேண்டுமென்றும் உத்தரவு இட்டார். உபாத்தியாயர் அதற் குட்பட்டுத் தன் பையனை அப்பையன் படிக்காததற்காகத் தண்டித்துவந்தார். உபாத்தியாயருடைய குமாரன், ஒருநாள் அடி பொறுக்கமுடியாமல், அப்பா! முதுகில் ஏன் அடிக்கிறீர் கள்? அது ஒரு குற்றமுஞ் செய்யவில்லை. என்வயிற்றில் அடியுங்கள். வயிற்றின்பொருட்டுத்தானே இவ்வளவு தண்டனை யும் என்று கூறினனாம். இவ்விதநிலைமையிலிருந்துவருகிறது நம் உபாத்தியாயர்களின் பிழைப்பு. தவிர, அநேக விடங்களில் கூட்டங்கூடிச் சம்பளம் போதாதென்று கூச்சலிட்டுங் கவர்ன் மெண்ட் செவிசாய்த்து மவுனஞ்சாதிக்கின்றனர். இஃது இவ்வாறாக, பரீக்ஷாதிகாரிகளோ, இன்ஸ்பெக்ஷன் செய்து இது நடத்தவில்லை அது நடத்தவில்லை, இந்தப்பாடத்தில் இது குறைவு, அந்தப் பாடத்தில் அது குறைவு என்று குறை கூறுகின்றார்கள். அவை உபாத்தியாயர்களின் குற்றமேயா யினும், வயிற்றுப் பிழைப்புக்குப் போதுமான நிதிபெறாது மூளையை விருத்திசெய்துகொண்டு, எப்படி எல்லாப்பாடங்களை யும் கற்பிக்கமுடியும் என்று ஏங்குகிறார்கள். குறைந்தது ஒரு குடும்பத்திற்கு 30 ரூபாய் 35 ரூபாயாவது இல்லாமல் எப்படிக்

காலம் கழிக்கமுடியும் என்று மயங்கித் தியங்கித் தவிக்கிறார்கள். ஆதலின், கவர்ன்மெண்டார் அவர்கள் காருண்யம் மிகுந்து இனிமேலாயினும் உபாத்தியாயர்களுக்கு வேண்டிய வளவாவது சகாயம் புரியுமாறு வேண்டிக்கொள்ள வேண்டுமென்பது ஒருபுறமிருக்க, உபாத்தியாயர் வேலையிலிருந்து வரும் நாம், ஆங்கில மேதாவி ஒருவர் கூறியவண்ணம் (A good teacher works for the boys and not for the money.) என்றதற் கிணங்க, நாம்பையன்களை விருத்திக்குக் கொண்டுவரக் கூடிய தக்க மார்க்கங்களைத்தேடி தற்காலம் கையாடிவரும் பாடத்திட்டங்களைத் திருத்திப் பழமையை அடியோடு புதுக்காவிடினும் கூடியவரையில், காலதேச வர்த்தமானங்களை யுத்தேசித்துப் புதுக்கி எடுத்தவுடன், 'கண்ணில்லாதவன் குருடன்.' 'காலில்லாதவன் நொண்டி.' என்று பாடத்தை ஆரம்பிக்காது, நீதியைப் புகட்டக்கூடியதாய், தெய்வசிந்தனையை வற்புறுத்துவதாகிய பாடங்களைக் கற்பித்து, பையன்களைச் சீர்திருத்தி முன்னுக்குக் கொண்டுவர முயல்வதோடு, மேலே கூறிய உபாத்தியாயர்களுக்குரிய இலக்கணங்களாகிய, ஜீவகாருண்யம், தெய்வவழிபாடு, அடக்கம், பொறுமை, நடுநிலை, பெருந்தகைமை, அநேக நூல்களில் பழகிய தேர்ச்சி, எடுத்துப்போதிக்கும் வன்மை, உலகியலறிதல் ஆகிய எல்லவித உயர் குணமும் பொருந்தியவர்களாயிருக்கப் பெரிதும் முயற்சி செய்து, சொல்லியவண்ணம் செய்கையில் காண்பித்து வருவோமானால், எல்லாம் வல்ல ஈசுரனும் நம்மேல் அருள் கூர்ந்து, நமக்குத் திருமகள் கடாக்ஷம் பாலிக்கும்படி செய்யும்படியும், காருண்ய கவர்ன்மெண்டாருய் மனமிரங்கி, நல்ல சகாயம் தக்கபடி அளிக்கும்படி யருள்புரியும்படியும் தெய்வத்திருவருளைச் சிந்திக்கின்றனன்.

அமிழ்தினுமினிய தமிழினை மாந்திய சகோதர சகோதரிகளே!

நான் இதுகாறும், எனது புன்மொழியால் தங்களின் அவகாசத்தை வீணாக்கினேனென்று மனம் வருந்தாது, இஃது மழலையர் வாயினின்றுண்டாம் குதலை மொழியெனக்கொண்டு மகிழுமாறும், குற்றங் குறைகள் மல்கி இருப்பினுங் கொள்ளாது, குணம் மாத்திரம் கிரகிக்குமாறும் மிகுந்த பணிவுடன் வேண்டுகின்றனன். சுபம்!

இங்ஙனம்,

☞ பி. சின்னப்பன்,

Now at தலைமையாசிரியர், போர்டு ஸ்கூல்,

ஆயக்காரம்புலம்.

நமது முக்கிய கடமை.

நவீன நாகரிகத்தாற் சிறந்த அமெரிக்கா, இங்கிலந்து, ஜெர்மனி முதலிய தேசங்களில் செல்வ நிலையும், கைத்தொழில் நிலையும், சுகவாழ்க்கைநிலையும், மற்றும்மேம்பட்டிருப்பானேன்! நமது தேசத்தில் மட்டும் மேற்கூறிய எந்த மேம்பாடும் இல்லா திருபபானேன்! அநேக ஆண்டுகளுக்குமுன் ஆரியர்களும் திராவிடர்களும் உயர்நிலை பெற்றிருந்த காலத்தில், கைத்தொழில், செல்வம், நாகரிகம், வர்த்தகம், அன்னியநாட்டு வர்த்தகம், முதலிய யாவும் மேம்பாடுற்றுச் சிறந்து விளங்கிற்று இந்தியா என்று ஆன்றோர்கள் சொல்லாலும் நூல்கள் வாயிலாலும் அறிகின்றோமே! அவ்வாறு சிறந்திருந்தற்குக் காரணம் என்ன! இப்போது இவ்வளவு வறிய நிலையில் இருப்பதற்குக் காரணம் என்ன!

ஆரியர்கள் காலத்திலும் திராவிடர்கள் காலத்திலும் அரசாங்கத்தாரும், பிரபுக்களும், பெருந்தகையாளர்களும் கல்வியைத் தேசம் எங்கும் பரவும்படி செய்வதிலே முக்கிய நோக்கமுள்ளவர்களாயிருந்தனர். அக்காலத்தில் வயிற்றுப்பிழைப்புக்காகக் கல்விகற்கவில்லை. உலக அறிவும், தத்துவ அறிவும், ஞானமும் உண்டாகும் பொருட்டே கல்விகற்று வந்தனர். மகா கவியாகிய திருவள்ளுவர் தமது கல்வியைக்கொண்டு ஜீவனம் செய்தாரில்லை. நெசவுத்தொழில் செய்து ஜீவனம் செய்ததை அறியாதவர் எவருமிலர். சீத்தலைச் சாத்தனர் என்னும் கடைச் சங்கம் மருவிய நல்லிசைப்புலவர் மதுரையில் வர்த்தகம் செய்து ஜீவித்திருக்கிருர். இங்ஙனம் கூறில் கணக்கின்றி விரியும். ஆதலின் இதிலிருந்து கல்வியும், கைத்தொழிலுமே தேசத்தின் முன்னேற்றத்துக்கு முக்கிய காரணம் என்று அறியலாகும். எந்தத்தேசத்தில் இவற்றை ஜனங்கள் அலக்ஷியம் செய்கிருர்களோ, அந்தத் தேசத்தில் செல்வநிலை முதலியன குறைந்து

ஜனங்கள் துன்புறுவார் என்பது ஒருதலை. அமெரிக்கா, ஜெர்மனி முதலிய தேசங்கள் இவற்றை நன்குணர்ந்து ஜனங்கள் அவ்விரண்டையும் அலக்ஷியம் செய்யாதிருந்திருக்கிறார்கள். அத்தேசங்களில் நூற்றுக்குப் பத்துப் பேர்கள்கூடப் படிக்காத வர்கள் இருக்கமாட்டார்களாம். நமது இந்தியாவிலோவென்றால் நூற்றுக்குப் பத்துப் பதினைந்து பேர்கள்கூடப் படித்தவர்களாக வில்லை. அந்நாடுகளில் ஆண் பெண்ணாகிய இருபாலரும் கட்டாய மாக வாசித்து வருகிறார்கள். நம் நாட்டிலோ பெண்பாலார் படிப்பதே இல்லை. மிகச்சிலரே பெண்பாலாரிற் படிப்பவர். அவர் களிலும் பெரும்பான்மையோர் படிப்பது எழுதப்படிக்கத் தெரியாத படிப்பேயாம். கடிதம் எழுதவும் தெரியாது. வந்த கடிதத்தைப்படிக்கவுந் தெரியாது. இத்தகையோர் கல்வியை என்னென்று சொல்வது. எல்லாவிதமான அறிவுக்கும் காரண மாயிருப்பது கல்வியே! எல்லாவித நன்மைகளையும் தருவது கல்வியே! பகுத்துணர் விருந்தும் கல்விகற்காமல் மிருகங்கள் போல உண்டு உறங்கித்திரிபவர் மிருகங்களேயாம்!

‘விலங்கொடு மக்களனையர் இலங்குநூற்
கற்றாரோ டேனையவர்.’

என்பது திருக்குறளன்றோ!

ஆதலின் கல்விகற்றால்தான் மேம்பா டடையலாம். கல்வி யொன்றுதான் அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும். கல்வி யும் கைத்தொழிலும் சிறந்த நாடே சிறந்தநாடாகும். ஆகை யால் எந் நாட்டினர்க்கும் தாமும் கல்வியைக் கற்றுப் பிறரையும் கற்குமாறு தூண்டுதலே கடமையாகும். அங்ஙனம் முயல்பவர்க ளே தேவருக்கு ஒப்பாவார்கள். ஆதலின் நாமும் அங்ஙனம் முயல்வதும், அங்ஙனம் முயல்பவர்க்கு நம்மால் கூடிய உதவி புரிவதுமே நமது கடமையாகும்.

S. KUPPUSWAMY AYYAR.

மாதர் நீதி விளக்கம்.

இது திருவாரூர் "திருவள்ளுவர் கல்விச்சங்க" ஸ்தாபகர்
V. வயித்திநாத ஸ்தபதி ஜோதிஷர் அவர்களால் எழுதியது.

(கடவுள் வணக்கமும் அவையடக்கமும்.)

ஆசிரிய விருத்தம்.

சீரேறு முத்தமப் பெண்கள் செயு முறையினைத்
திரட்டியா சிரியத் திஞல்
செப்பவே பிரணவத் தொப்புட னிருந்திடுஞ்
செயசித்தி விநாயக ரெனும்
பேரேறு கணபதியி னிருமலர்த் தாளினைப்
பேசியே தோத்த ரித்துப்
பிரியமுடன் வேலவன் வள்ளிதெய் வானையைப்
பேணியே யடிவ ணங்கி
தாரேறு மார்புடைய சிவனுமை மலர்ப்பதம்
தான் துதித் தேவா ணியின்
சரண மலர் தன்னையே தான்றுணைக் கொண்டுமே
சாற்றினேன் மாதர் நீதி
ஏரேறு கவிவலோர் இதனைப் பொறுத்துமே
இயம்பிடுக வாசி யென்றும்
இந்தநூற் கற்பவர்கள் இதன்வழி நடந்துளோர்
என்றென்றும் வாழ்க மன்னே. (1)

நூல்.

நித்திய கரும விதி.

உத்தமப் பெண்களின் குணமதைச் சொல்குவேன்
உணர்ந்துட னடத்தல் வேண்டும்
உதயமா தற்குமுன் துயில்விட் டெழுந்துமே
உனது நாயகன் றெழுதுமே
நித்திய மனைக்குரிய காலைக் கடன்களை
நியமமாய்ச் செய்ய வேண்டும்
நிலமதிற் றூசுடன் குப்பையில் லாமலே
நினைவாய்ப் பெருக்க வேண்டும்

பத்தியாய்ப் புதியநீர் கொண்டுமே சாணமது
  பசு * கோம யத்தி னாலே
பகருமுற் றந்தெரு புழக்கடையு ளாமதைப்
  பார்த்துத் தெளித்தல் வேண்டும்.
இத்தனை வேலைகளும் ஆனபின் பேதனது
  இன்கணவ னையெ ழுப்பல்
இதுநீதி யாகுமென மநுநீதி நூலிலே
  இயம்பினார் அறிஞர் மன்னே. (2)

கோலம் இடும் விதி.

குலமங்கை யானவர்கள் கோலமிடு பொழுதிலே
  கூறரிய விரல்க ளாலும்
குழையுள்ள மூங்கிலிற் பலசித்ர வேலைகள்
  குறித்திடுங் குழையி னாலும்
நலமாகவே யிடவும் வேண்டுமாம் பேதங்கள்
  நாடியே வந்து விட்டால்
நன்மையது மலவென்று தான்கலைத் திடவொணா
  நாட்கலைத் திடவே ண்டிடில்
வலமான கையினா லேதுடைத் திடல் வேண்டும்
  மற்றகை பாதங்களால்
மதியின்றி யேதுடைத் தாலிட்ட தேவதைகள்
  வருகாது துயர மாகும்
பலமான குடிகளிற் றான்பிறந் தோமென்று
  பரமாதர் தங்க ளுக்குப்
பகர்கூலி தான்கொடுத் தேகோல மிடுகுதல்
  பழியாகு நீதி மன்னே. (3)

(தொடரும்)

குறிப்பு :— கோலமிடல் பச்சரிசி மாவினால் இடவேண்டும். அம் மாவை எறும்பு முதலான ஜீவராசிகள் உண்டு பசியாறல் வேண்டும் இது வின்றி சுண்ணாம்பு நீற்றினாலும், கூழாங்கல்லை இடித்த தூளினாலும் அநேக மாதர்கள் கோலமிடுகின்றனர். இவ்விதம் கோலமிடுவதினும் இடாமை நன்று. இதனால் மிகுந்த பாவமும் சாபமும் நேரும் கோல மிடல் அழகிற்கென்று மட்டும் நினைக்கலாகாது. நித்தியஞ் செய்ய வேண்டிய தர்மத்திலொன்றாகும். ஆதலால் நமது நாட்டு மாதர்கள் அனைவரும் இம் மாதர் நீதிவிளக்கத்திற் கூறியுள நற்போதனைகளை இரு தயத்திருத்தி அவ்வண்ணமே நடப்பார்களாகில் நமது நாட்டில் தரித்திரமே தலைகாட்டா தொழியுமென்பது திண்ணம். ஆதலால் இச் செய்யுளையும் இனிவருஞ் செய்யுள்களையும் செவ்வனே நோக்கிப் படிப்பார்களாக.

பத்திராசிரியர்.

---

* கோமயம்=பசுவின் சாணம்.

தேசநலப் பகுதி.

ஸ்ரீ விவேகானந்தர்.

நீர்வள நிலவளங்களாற் சிறந்த பாரத நாட்டில் 1862-ம் வருஷத்தில் ஜனவரி மாசம் 9-ம் தேதியில் காயஸ்த வமிசத்தில் ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் உதித்தார். இவருடைய முகத்தில் திவ்யதேஜஸ் பிரகாசித்தது. இவர் உருவத்தில் தமது பாட்டனுரை ஒத்திருந்தார். இவருடைய பாட்டனுர் கடைசிக் காலத்தில் துறவறம் பூண்டிருந்தார். இவரும் நடையுடை பாவனைகளில் பாட்டனுரை ஒத்திருந்ததனுல் ஒருசமயம் துறவியாவாரோ என்ற எண்ணம் சிலருக்கு உண்டாயிற்று.

விவேகானந்தரின் தந்தையாருக்கு விசுவநாததத்தர் என்று பெயர். அவருக்கு வெகுநாள் வரையில் குழந்தை பிறக்கவில்லை. அதனுல் புத்திரபாக்கியம் இல்லையே என்று மிகவும் வருந்தினுர். அநேக விரதங்களை யனுஷ்டித்துத் தானதர்மங்களைச் செய்தார். ஸ்ரீகாசி க்ஷேத்திரத்திற்குப் போய், ஸ்ரீ விசுவநாதரை அன்போடு வணங்கித் துதித்தார். நல்ல புத்திரனைப் பெற அருள் செய்யவேண்டும் என்று ஸ்தோத்திரம் பண்ணினுர். பிறகு கொஞ்சநாளைக்கெல்லாம் ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தார். அக்குழந்தைக்கு முதலில் வீரேசுவரர் என்று பெயரிட்டழைத்தார்.

வீரேசுவர ராகிய நமது விவேகானந்தர் சிறுவயதில் மிக்க அழகுள்ளவராக இருந்தார். அதனுல் பள்ளிக்கூடத்தில் பிரவேசிக்கும்போது அவருக்கு நரேந்திரநாததத்தர் என்று பெயரிட்டிருந்தனர். நரேந்திரன் என்ருல் மனிதர்களில் சிறந்தவன் என்பது அர்த்தம்.

சிறுவயதிலேயே விவேகானந்தர் அடியார்களுக்கு உழைப்பதும், தத்துவ சாஸ்திரங்களை வாசிப்பதுமாக இருந்தார்.

வாசிக்கும் மாணவனாக இருந்தபொழுதே விவேகானந்தர், ஒரு தத்துவ சாஸ்திரம் எழுதி ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்னும் ஆங்கில தத்துவ சாஸ்திரி எழுதிய தத்துவ சாஸ்திரத்தைக் கண்டித்திருக்கிறார். பள்ளிக்கூடத்தில் சரிவரப்படித்து பி. ஏ. பரீக்ஷையில் தேறிப் பட்டமும் பெற்றார். அதன் பிறகு அவர் தந்தை கொஞ்ச நாளைக்குள் மரணம் அடைந்தார்.

விவேகானந்தர் தமது மாமனோடு அடிக்கடி ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸரிடம் போய் ஆசரித்து வந்தார். பரமஹம்ஸர் சொல்லும் விஷயங்களையெல்லாம் மிக்க ஊக்கத்தோடும் சிரத்தையோடும் கவனித்தார். அதனால் பரமஹம்ஸருக்கு விவேகானந்தரிடம் மிக்க சந்தோஷம் உண்டாயிற்று. பரமஹம்ஸர் விவேகானந்தரை நல்ல பாடல்கள் பாடும்படி சொல்லுவார். உடனே விவேகானந்தர் கீர்த்தனைகளை உருக்கத்தோடும் பக்தியோடும் பாடுவார். அதனாலும் பரமஹம்ஸருக்கு இவரிடத்தில் அன்பு உண்டாயிற்று இவ்விதமாகப் பழகி விவேகானந்தர் பரமஹம்ஸருக்குச் சிஷ்யரானார்.

சிலநாள் கழித்துப் பரமஹம்ஸர் மரணம் அடைந்தார். அதன்பிறகு விவேகானந்தர் துறவறம் பூண்டு இமயமலைச் சாரலுக்குச் சென்றார். அங்கே ஆறுவருஷகாலம் யோகாப்பியாசம் செய்துவந்தார். இவர் நல்லொழுக்கமும் நற்குணமும் உடையவராக இருந்தார். யாரிடத்திலும் அன்பாகப்பேசுவார். தத்துவ உண்மைகளைப்பற்றி நன்றாய்ப் பிரசங்கம் செய்வார்.

இவருடைய சக்தியைக்கண்டு மெச்சிச் சென்னை ராஜதானியிலுள்ள ஜனங்கள் செலவுக்குப் பணம் கொடுத்து இவரை அமெரிக்காவுக்கு அனுப்பினார்கள். அங்கே சிக்காகோ என்று ஒரு பெரிய பட்டணம் இருக்கிறது. அப்பொழுது அங்கே மதவிஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு ஒரு பெரிய சபை கூடிற்று. அந்தச் சபையில் விவேகானந்தர் ஹிந்துமதத்தைப் பற்றி அநேக பிரசங்கங்கள் செய்தார். இவர் எடுத்துக்கூறிய தத்துவ உண்மைகளைக் கேட்டு அமெரிக்காவிலுள்ள எல்லோரும் புகழ்ந்தார்கள். இந்தியாவைப்பற்றியும் ஹிந்துமதத்தைப் பற்றியும் எல்லாருக்கும் மிக்க கண்ணியம் உண்டாயிற்று.

அதன்பிறகு இங்கிலாந்துக்குச் சென்று அங்கேயும் அநேக பிரசங்கங்கள் செய்தார். அதன்பிறகு ஜென்மபூமியாகிய இந்தியாவுக்குத் திரும்பினார்.

இவர் அமெரிக்காவில் வேதாந்த சங்கத்தையும், சாந்தி ஆச்சிரமத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார். காசியில் ஒரு மடம் கட்டிவைத்திருக்கிறார். இவர் பிரசங்கத்தைக் கேட்ட எவரும் இவரைப் புகழுவார்கள். இவர் 1902-வரு ஜூலை-மீ 4வ பரமபதம் பெற்றார்.

S. KUPPUSWAMY AYYAR.

அபிப்பிராயங்கள்.

ஆழியால் சூழப்பட்டதும் பரதகண்டமுமாகிய பூவில், மிகச் சீர்த்தி பெற்றவரும், மிக்க கல்வி தேர்ச்சியடைந்தவரும், புவிக்கு ஓர் திலகம்போன்றவருமாகிய உயர் திருவாளர் R. V. சர்மா அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

தாங்கள் எடுத்துக்கொண்ட காரியத்தை நினைக்குமிடத்துப் பெரிய காரியம். இது என்றும் நிலைக்குமாறு கடவுளைப் பஜித்தாம். நம் "கலாநிதி"த்தாய் இது வரையில் ஐந்து சேயைப் பெற்று உலகமுழுவதும் போய் தெரிவித்துவருமாறு அனுப்பினாள். அச் சேய்கள், தாய்சொல்லைத் தலைமேற்கொண்டு உலகிலுலாவிப் பரவின. இது நிற்க.

உலகத்தில் இருபாலர்க்கும் வயது எவ்வளவென்று ஏற்பட்டிருக்கின்றது. ஒருவன் பிள்ளையில்லாமல் மிகுந்த தவஞ்செய்து இறுதியில் ஒரு ஆண் மகவைப் பெற்று, அதைப்பேணி வளர்த்து, சப்பாணி, காப்பு, தாலாட்டு, என்னும் பத்துப் பருவங்கள் கடந்து பின்னர், தன் தாய்தந்தையர் இருக்கும் போது, அப்பிள்ளைக்கு ஆயுள் குறுகி இருக்கிற சமயத்தில் கடவுள் கிருபைகூர்ந்து இன்னுங்கொஞ்சம் ஆயுளைக் கொடுத்

தாற்போன்று, இவ்வுலகத்தில் இவ்வளவு ஆண்டுகளாக நமக்கு நல்ல பத்திரிகை வாவில்லையே யென்று, நம் வாழ்நாளை எவ்விதங் கழிப்பதெனவெண்ணுங்காலத்தில். "பழம் நழுவி பாலில் விழுந்தாற்போன்று" இக் "கலாநிதி" அச் சமயம் உலகு பார்க்க வந்தது. ஆதலால், இதை வாசிக்கும் அன்பர்களுக்கு இதன் உண்மைவிளங்கும். ஆனதால் ஏனைய அன்பர்களும் கலாநிதியை கைக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

"புத்தகமே சாலத் தொகுத்துப் பொருள் தெரியார்
உய்த்தக மெல்லாம் நிறைப்பினும் மற்றவற்றை
போற்றும் புலவரே வேறே பொருள் தெரிந்து
எற்றும் புலவரும் வேறு". (நாலடியார்)

என்றபடி, தன்னுடைய வீட்டில் புத்தகங்களைச் சேர்த்தாற் போதாது. பொருளறியவேண்டும். கலாநிதியை கணக்கிற்கு வாங்குதல் பயனில்லை. அதை மும்முறையும் படித்தாற்றான் பயனும் மேன்மையு முணரலாம்.

"காலங் கடக்காமல் கவலையை நீக்குகின்ற
ஆலங் கெடுக்காமல் அண்ணல் தம்மிடற்றில்
எலம் போல் வைத்து எத்திய கலாநிதியை
நீலம் போல வாங்கி நிதியை வாசியுமே."
"அன்றைப் பிணிபோம் அரனது அருளினாலே
இன்றைப் பாவம் போம் இக்கலா நிதியினாலே
கன்றைப் பிரிந்த ஆவைப்போல் கதறிவந்துநான்
இன்றைக்கு எழுதுவேனே இக்கலா நிலையத்திற்கே."

நண்பர்காள்! நாம் இச்செய்யுளில் சொல்லிவந்த விஷயத்தைப் பார்த்தால் அதிக சந்தோடமாயிருக்கின்றது. நந் தமிழ் மக்களுக்காக, சர்மா அவர்கள் ஈட்டும் பொருள்களெல்லாவற்றையும் ஓர் தரும பள்ளியில் சேர்க்கிறார்கள் என்பது நமதெல்லோர்க்கும் தெரிந்த விடயமே. ஆதலால் கலாநிதிக்குச் சந்தாதாரர்களாகத் தாமதிக்காதீர்கள்.

இங்ஙனம்,
K. N. பாலசுப்பிரமணியனென்னும்
☞ கல்யாணசுந்தரம்,
மஞ்சள்வயல்.

மதிப்புரை.

வேளாள மித்திரன்.

இப் பத்திரிகை வரப்பெற்றும். மதுக்கரையினின்று மாதந்தோறும் வெளியாவது. இது ஒரு குலத்தின் பெயரைப் புனைந்திருந்தாலும், இதனுள்ளிட்ட விடயங்கள், பொது ஜனங்களுக்கு இன்றியமையா பலான நன்மைகளைப் புகட்டுவதில் முதன்மைபெற்றுத் திகழ்கின்றது. கற்றுத்தேர்ந்த பலரால் இதற்குக் கட்டுரை அளிக்கப்பெற்றிருக்கின்றது. தமிழர்கள் அனைவரும் இதற்கு மித்திரனுகவேண்டியதென நாம் சிபார்சு செய்கின்றேம். இதன் வருஷ சந்தா ரூபாய் இரண்டே. மானேஜர், "வேளாள மித்திரன்" ஆபீஸ், மதுக்கரை P. O., (Via) போத்தனூர், கோயமுத்தூர் Dt. என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

* * *

"சுதேச நாட்டியம்."

இப்பெயர் புனைந்த பத்திரிகை வரப்பெற்றேம். இப் பத்திரிகை யாழ்ப்பாணத்திலிருந்து மாதமிருமுறை வெளியாவது. பொது ஜன நன்மைக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும், சைவாபிவிர்த்திக்கும், இந்துமத வளர்சிக்கும் உழைப்பது. இருபத்தெட்டு வருஷகாலமாகப்பெரும் புகழுடன் தமிழ்நாட்டில் உலவியது. இதன் ஆசிரியர் கல்வியில் மாசற்ற பாண்டித்திய முடையாராதலால், இப் பத்திரிகை முழுவதும் இனிய செந்தமிழ் நடையே நிரம்பியிருக்கின்றது. ஆனதால் கற்றறிந்த ஒவ்வொருவரும் இதைப் பெற்று மகிழ்தல் அவசியமாகும். இதன் வருட சந்தா ரூபா இரண்டரை தான்.

பத்திராசிரியர்.

பல சரக்கு.

வேதாரணியம்
மஹா வியதீபாத உத்ஸவம்.

இவ்வுத்ஸவம், மார்கழி-மீ 20, 21, 22-ம் தேதிகளில் வேத பாராயணம், தேவாரம், திருவாசக பாராயணம், சிவநாம பஜனைகளுடனும், வாத்ய கோஷத்துடனும் சாஸ்திரோக்தமாய் வெகு விமரிசையாக நடந்தேறியது. முதல் நாள் வேதாரணியம் பசுமடம் கந்தசாமி சுவாமிகளாலும், இரண்டாவது தினம் தேவஸ்தானம் உத்தியோகஸ்தர்களாலும், மூன்றும் நாள் வியதீபாத தினத்தன்று கோடியக்கரை ஓ. அ. க. ஓமக்குட்டியா பிள்ளை அவர்களாலும் உபயங்கள் செவ்வனே நடந்தது. இம்மூன்று தினங்களிலும் பிராமண போஜனமும் விமரிசையாக நடைபெற்றது. இவ்வுத்ஸவ சம்பந்தமாய், தேவஸ்தானம் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் குமாரசாமி பண்டாரசந்நிதி அவர்கள் எடுத்துக்கொண்டு செய்த முயற்சிகள் பெரிதும் பாராட்டற் பாலதே.

* * *

பூமிக்குள் வீடு.

அமரிக்காவில், வானோக்கிக்கொண்டு, 60, 70 மாடிகள் வரையில் கட்டிவருகின்றனர். தற்காலம், ஜப்பான் தேசத்தில், பூமியில் அடுக்கடுக்காக 70, 80, மாடிகள் வரையில் கட்டி, ஒன்றிலிருந்து மறுமாடிக்குப் போவதற்கும், மேற்செல்ல இருப்பது போன்ற இயந்திரங்களும் தயாரித்து இருக்கின்றனராம். மேல்நோக்கிக் கட்டுவதைவிட, பூமியிற்குள் கட்டிக்கொண்டுபோவது, செலவு குறைவாகவும் இலகுவாகவுமிருக்கின்றதாம். காற்றோட்டம், வெளிச்சம் முதலியன தாராளமாக வருதற்கான சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவாம். இம்முறையே மிகச்சௌகரிய மெனக்கருதுகிறார்களாம்.

கலாநிதிச் சேவகன்.

அன்பர்காள்!

நமது 'கலாநிதி'த்தாயீன்ற சேய்கள் 1-ம், 2-ம் செல வழிந்துவிட்டதால், அவ்விரண்டையும் மீண்டும் அச்சிடப் போகின்றோம். அச்சானதும் 1, 2 அல்லது சித்திரை, வைகாசி சஞ்சிகைகள் சேராதவர்களுக்கு அனுப்பிவைப்போம். ஆன தால் தற்சமயம் 3 முதலுள்ள சஞ்சிகைகளைப் பெற்றுக்கொண்டு கலாநிதியை ஆதரித்துவருமவண்ணம் வேண்டிக்கொள்ளு கிறேன்.

சந்தாப் பணத்திற்காக எத்தனை முறை எழுதியும், அநேகர் கவனிக்காது பராமுகமாகவிருப்பது அவ்வவர்க்கே நன்கு தெரிந்த விஷயம். இனி இரண்டாவது ஆண்டும் சமீ பிக்கின்றது. இரண்டாமாண்டுப் பணத்தை முன்னரே, அதா வது இவ்வாண்டு பங்குனியிலேயே எங்களுக்கு அனுப்பிவைத் தால் அடுத்த ஆண்டில் பத்திரிகை காலதாமதமன்றியில் ஒவ் வொரு மாதமும் முதல் தேதியில் வெளிவரச் சௌகரியமாக விருக்கும். இவ்வாண்டுச் சந்தாவையே இதுகாறும் நிறுத்திக் கொண்டிருந்தால் அடுத்த ஆண்டுப் பணமும் சேர்ந்துகொள்ளு மல்லவா? ஆனதால் தயைசெய்து சந்தாத்தொகையை உடனே மணியார்டர் செய்து கலாநிதியைக் காப்பாற்றுமாறு வந்தனத் துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

***

ஒரு வேண்டுகோள்.

நமது கலாநிதிக்கு அன்பு செலுத்துபவர்களில் அநேகர் உத்தியோகத் துறையில் உழைப்பவர்களாக விருக்கின்றனர். உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி இடமாறுதல் சகசமே. அவ் விதம் இடம்மாறும்பொழுது அவ்வவர்களின் புதிய விலாசத்தை தயைசெய்து நமது ஆபீசுக்கு அறிவித்தால் பத்திரிகை அனுப்பு தற்குச் சௌகரியமாகவிருக்கும். இல்லையேல் பழைய விலாசத்

திற்கே அனுப்பநேரிடும். பத்திரிகை ஒழுங்காக வராமைக்கு நமதுமீது குற்றங்கூறல் பொருந்தாது. ஆதலால் அன்பர்கள் இதுகாரியத்தில் சற்று ஞாபகம் வைத்து தங்களின் புதிய விலாசத்தை அல்லது அடிக்கடி மாறுமிடத்தை அறிவிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன். பெரும்பாலும், உத்தியோகமுறையிலுழைப்பவர்கள் சந்தாத்தொகையை அளித்துவிட்டார்கள். அத்தகைய அன்புடையார்களுக்கு காலத்தில் பத்திரிகை செல்லாது திரும்ப நேரிடுவதால், அடிக்கடி நேரும் நூதன விலாசத்தை அறிவிக்கும்படி மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாதந்தோறும் ஒவ்வொரு சந்தாதாரர்களுக்கும் தவறாமல் பத்திரிகை போஸ்டில் அனுப்பிவிடுகிறோம். அங்ஙனமிருந்தும் பத்திரிகை வரவில்லையென்று சிலர் குறைகூறுகின்றனர். இதன் காரணம் எமக்கே புலனாகவில்லை. போஸ்டாபீசுகளில் ஏதேனும் "கொறளிப் பிசாசு" இருக்கின்றனவோ என்னவோ தெரியவில்லை. கொறளிப் பிசாசுகள் எடுத்துப் போனதை மீண்டும் கொண்டுவந்து போட்டுவிடுமென்று சொல்வது வழக்கம். இது அவ்வண்ணஞ்செய்வதாயும் தெரியவில்லை. ஆனதால் இது வேறாயிருக்குமென்றும் ஐயமுண்டாகின்றது. இதற்குப் பின்னால் யோசிப்போம். பத்திரிகை கிடைக்காத நேயர்கள் தயைகூர்ந்து ஆபீசுக்கு அறிவித்தால் மறுதபாலில் பத்திரிகை அனுப்புவோம். அறிவிக்காமல் குறை கூறல், மேற்கூறிய காரணத்தால் எமதுமீது குற்றமில்லை. விலாசத் தவறில்லாதிருந்தும் பள்ளத்தூரில் சிலருக்குப் பத்திரிகை சேரவில்லையாம். ஏனென்று ஷை போஸ்டாபீசாரைக் கேட்கின்றோம்.

க. சேவகன்.

சாஸ்வத சந்தா நேயர்கள்.

(முன் தொடர்ச்சி.)

37. ஸ்ரீமாந் முரு. மா. மாயாண்டிச் செட்டியார் அவர்கள்,
தென்னூர், திருச்சி.
38. ,, கு. ராம. கும. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
நச்சாந்துப்பட்டி, புதுக்கோட்டை எஸ்டேட்.
39. ,, த. கிருஷ்ணம் செட்டியார் அவர்கள், கோயமுத்தூர்.
40. ,, கவீஸ்வர மீனாக்ஷிசுந்தரம் அய்யர் அவர்கள், கோயமுத்தூர்.
41. ,, பள. வெ. சு. லெட்சுமணன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.
42. ,, ந. க. சுப. நல்லகருப்பஞ் செட்டியார் அவர்கள்,
கோயமுத்தூர்.
43. ,, ரா. நஞ்சய்யக் கவண்டர் அவர்கள், தெக்கவளவு,
கீரணத்தம்.
44. ,, C. R. கல்யாணசுந்தரமய்யர் அவர்கள், கோயமுத்தூர்.
45. ,, G. V. கிருஷ்ணய்யர் அவர்கள், கோயமுத்தூர்.
46. ,, பெ. இரங்கக் கவண்டர் அவர்கள், மளிகை, கோயமுத்தூர்.
47. ,, K. முத்துச்சாமிக் கவுண்டர் அவர்கள், மணியம்,
துடியலூர்.
48. ,, வெ. வீர வன்னியப்ப செட்டியார் அவர்கள், திருப்பூர்.
49. ,, வெ. சி. வெள்ளியங்கிரிக் கவண்டர் அவர்கள், இலுப்பூர்.
50. ,, மு. அரு. ராம. ப. முத்துவீரப்ப செட்டியார் அவர்கள்,
லெக்ஷுமிவிலாஸ், பள்ளத்தூர்.
51. ,, தெ. வெ. அ. கதி. அண்ணாமலை செட்டியார் அவர்கள்,
காங்கயம்.
52. ,, ராவ் பகதூர் N. நல்லதம்பிச்சர்க்கரை மன்றாடியார்
அவர்கள், பத்தூர் of பளயகோட்டை.
53. ,, K. கிருஷ்ணய்யர் அவர்கள், L. F. ஓவர்சியர், ராசிபுரம்.
54. ,, சு. காங்கமுத்துப் பிள்ளை அவர்கள், பென்ஷனர்,
காட்டுக்கோட்டை.
55. ,, P. A. சுப்ரமண்ய அய்யர் அவர்கள், கீழவீதி, சிதம்பரம்.

மதனாபிஷேகம்.

அத்தியாயம் 3,

தாசியின் குலத் தொழில்.

(முன்தொடர்ச்சி.)

நீர்வள நிலவள மிகுதியான் "நெற்கரும்பெனக் கரும்பெலா நெடுங் கமுகென்ன, வர்க்கவான் கமுகொலி கலிதெங்கென. வளர்ந்த பொற்கவின் குலைத் தெங்கு கார்ப்பந்தரைப் பொறுத்து,நிற்கநாட்டிய காலென நிவந்த தண்பணையே" என்று ஆன்றோரான் மிகுத்துக்கூறிய, மிக்க செழிப்பினை யுடைத்தாய், சுரும்பினம் ரீங்காரம் செய்யவும், கோகிலங்காள் கூவாநிற்கவும், தோகை மஞ்ஞைகள் ஆடி மகிழுறவும், பசுஞ்சுகங்கள் பாடிக் களிப்புறவும், நாகணவாய்ப்புட்கள் நகரின் றேகையர் நவின்றதுரைக்கவும், நாண்மலர்கள் நறவைச்சொரியவும், விளங்காநின்ற நறுமலர்ச்சோலைகளான் சூழப்பெற்று, பொன்னகரைப் பார்ப்பான்போன் றுயர்ந்து, பொன்மயமாய்ப் பிரகாசியாநின்ற மிக்க வனப்போங்கிய கோபுரங்களும் கோயிலும் நடுநாயகமாய் விளங்கவும், மிகுதியாய்த் திருவேறிய கோவிலில் மீனாக்ஷிசுந்தரேசர் மாறாக் கருணைமழை பொழிந்து மாக்ஷிமையொடு யாவற்றிற்கும் மூலாதாரமாய்த் தோன்றாநிற்கவும், பொன்னாலாய கதலிகளும், பூகங்களும், தோரணங்களும் மாறாவழகினைச் செய்து இணையற்றிலங்கும் விசாலமாகிய வீதிகளும், வெண்சுதை, செஞ்சுதை, பைஞ் சுதைகளாற்றீற்றியதும், விலையேறிய கற்களாலும், கம்பிகளாலு மலங்காரமா யமைத்த சாளரங்கள், இளந்தென்றலை யுட்புகுத்தி யுற்சாகத்தைக் கொடுப்பதும், நகர் புகுவாரை நாடி, வாருங்கள்! வாருங்கள்!! என்று அழைப்ப

தொத்தசைகின்ற பதாகைகள் அசையா நிற்பவுமாகிய கண்கவர்கின்ற எழில்பெற்றிலங்கும் விண்ணளாவிய வீடுகளும், அரும்பொருளும் மலிவாயளிக்கும் அணியேறிய ஆவணங்களும், அளவிறந்த தெருக்களும், சந்துகளும், மூலைகளும், முடுக்குகளும், முச்சந்திகளும், சத்திரங்களும் அன்னசாலைகளும், நீர்ச்சாலைகளும், மாணவர் பயிலுங் கழகங்களும், மாணவிகள் கற்குங் கல்லூரிகளும், பலவித கல்வி பயில் களங்களும், நீதிஸ்தலங்களும், அரசரிருக்கும் அத்தாணிமண்டபங்களும், மாளிகைகளும், கந்தவாரங்களும், முனிவர்கள் வசிக்கத்தக்க தாபதங்களும், இன்னும் பலவித தொழிற்சாலைகளும் ஒன்றிற்கொன்று சுந்தரமிகுந்து தோன்றாநிற்கவும், யானைகளும், குதிரைகளும், வண்டிகளும், ட்ராம்கார்களும், மோட்டார் பஸ்களும், சைக்கிள்களும், ஓயாது வீதிகளிற் செல்லாநிற்கவும், நானாவித வாத்தியக் கோட்டங்கள் பண்ணெடுங்காவத தூரங்கேட்காநிற்கவும், கண்டாருள்ளங்களிப்பேறி ஆச்சர்யமுற்று இந்திரன் பதியுமிதற்கிணையல வென்றியம்பத்தக்க சிறந்த செவ்விவாய்ந்தது மதுரையம்பதி. அப்பதியின்கண், பரத்தையர் வீதியில், காண்பாருள்ளங் கவரத்தக்க கோலமிகுந்த மாடமொன்றுள்ளது. அப்புக்கிலின் அமைப்பை யறைவதற்கு ஆதிசேடனும் மயங்குவான். அம்மந்திரஞ் சுடுமண்ணாலாக்கப்பட்டதன்று. யாவும் நானாவித சலவைக் கற்களாற் செய்யப்பட்டதாம். தலைவாயிலிற் பொன்னாலும் நவரத்தினங்களாலும் சிங்காரிக்கப்பட்டிருந்தது. திண்ணைச்சுவர்களில் கொக்கோக நூலிற்காட்டிய சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. திண்ணைகளும் அதைச்சார்ந்த சோபானமும், வளவியும், வாயிலும் அளவிலா வேலைப்பாடமைந்திருந்தன. தூண்களெல்லாம் மாண்புள்ள மரகதத்தால் நிறுத்தப்பட்டிருந்தன. அம்மாடம் ஐந்தடுக்காலாக்கப்பட்டிருந்ததால் ஆகாயமளாவி யுயர்ந்துகாணப்பட்டது. ஒவ்வொரு மேல் வீடும் ஒவ்வொரு நிறமுள்ள விலை மிகுந்த சலவைக் கற்களாற் கட்டப்பட்டிருந்தது. மாடிகள் தோறும் மணம் வீசும் ரோஜா, மல்லிகை, முல்லை, செவ்வந்தி, பாரிஜாதம், மனோரஞ்சிதம், அழகுள்ள இலைகளையுடைய சீமைச் செடிகள் முதலிய புஷ்பச் செடிகளைப் பொன்மயமான தொட்டிகளில் பயிராக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கும் சிங்காரமான கட்டில்களும், உயர்ந்த

மெத்தைகளும், நாற்காலிகளும், சோபாக்களும், மேஜைகளும், நிலைக்கண்ணாடிகளும், காற்றுவீசும் இயந்திரக் காற்றாடிகளும், மின்சார விளக்குகளும், தாம்பூலத்தட்டுகளும், வாசமிகுந்த சந்தனம் நிறைந்த சந்தனப்பேலாக்களும், புனுகு, ஜவ்வாது, லவண்டர், அத்தர் தினுசுகளும், சங்கீதம் பாடுதற்கேற்ற துணையாகிய வீணைகளும், பிடில்களும், குழல்களும், சுருதிகூட்டுங் கருவிகளும், இன்னும் அநேகவித விநோதங்களும், படுக்கையுள்ளிற்கேற்ற சிங்காரமான படங்களும் வைக்கப்பட்டிருந்தன. அம்மனையின் மாடிகளில் அலங்காரமாய்க் கட்டிய பைந்துகிற் கொடிகள், மந்தமாருதத்தால் மாறாதசைவது, இழிபவர் உயர்ந்தோர் மூத்தோர் இளையவர் கழியா நோயாற் கழிபவரென்றும் மிக்க சுந்தரம் வாய்ந்த ஆடவர்களென்றும் வேற்றுமைப்படுத்தாது பொருணனி கொடுப்பார் யாவராயினும் வாருங்கள்! வாருங்களென்று முகமன்கூறி அழைத்தி லொத்திருந்தன. இவ்வசதியை நோக்கினரெல்லாம் இஃது காமனுமிரதியும் போகம் நுகர்தற்கென் றமைத்ததோ வென்பர். வேறுசிலர், இந்திரனுஞ் சசியு மிருப்பதற் கேற்றதென்பர். வேறுசிலர், முற்றுந்துறந்த முனிவர்களும் இவ்வில்லத்தைக் கண்ணுறில் மோகங்கொள்வாரென்பர். வேறு சிலர், இம்மாடத்தைத் தெய்வத்தச்சன் சிருட்டித்தானோ வென்பர். இவ்வண்ணம் பலரும் பலவிதமாய் மாற்ற மியம்பிப் புகழத்தக்க பேரழகுவாய்ந்த மாளிகையின் மூன்றாந்தளத்தில், விலை வரம்பறியா இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தன. தங்கத்தாம்பாளத்தில் சிற்றுண்டிகள் வைக்கப்பட்டிருந்தன. பாகுவெள்ளிலை மற்றோர் தட்டிலிருந்தன. இயந்திரத்தாலசையுங்காற்றாடிகள்காற்றைக்கொடுத்துக்கொண்டிருந்தன. இளந்தென்றலும் வீசிக்கொண்டிருந்தன. அவ்விரத்தினக் கம்பளத்தின்மீது பூலோகரம்பையோ! புகல் சித்திர ரேகையோ! துகள்றுமா கிள்ளையோ! தோகை மயிலோ! வாகான ரூபியோ! மாணிக்கத் தீபமோ! மதனன் ரதியோ! அழகான அன்னமோ! திகழ் சோதி மின்னலோ! திகட்டாத கன்னலோ! தேவமாதோ! என்றையுறத்தக்க வனப்புற்ற இளநங்கை யொருத்தி உட்கார்ந்திருந்தனள். அப்பேதையின் சித்திரம் அணங்கினுக் கணங்கியற்றும். மயக்கற்றார் மதியையும் மயக்கும். கைபடிந்து திருமகளைப் படைத்த பின்பு படைத்தனன்

கமலத்தோனென்று, துறந்தாருஞ் சொல்லுவார். அவ்வனிதையின் வயது ஈரெட்டென்றே யியம்பலாம். இவளது சுந்தர வடிவைக்கண்ட, ஐந்தவித்தாரும் அவாவுறு தகலார். இவளே! நமது கதாநாயகியாகிய, கலாப மொத்திலங்கும் மதனாபிஷேகம். இவளது பிற்கால நிகழ்வு கண்டே இப்பெயர் இவளது அன்னை இட்டனள் போலும். அழகினுக் கேற்ற பெயரமைந்த மதனாபிஷேகம், அருகிருந்த சிற்றுண்டி யருந்தி, பாலுண்டு, சற்றிளைப்பாறி, பாடுதற் கவாவுற்று, மாசற்ற இலக்கணம்பொருந்திய ஓர் வீணையை எடுத்து, தந்திகளைச் செவ்வைப்படுத்திச் சுருதி கூட்டியவண்ணமா யிருந்தனள்.

அவ்வமயம், வில்வளைத்தாற்போன்ற வளைந்த உடலும், தடிக்கொம்பைப் பிடித்த கையும், பற்களுதிர்ந்து தேங்காய்க் குடுக்கைபோன் றுருக்கொண்ட வாயும், அதில் வடிந்துகொண்டிருக்கும் எச்சலும், நடுக்கம் பொருந்திய தலையும், பொடிக்கொசுகு மொய்த்துக்கொண்டிருக்கும் கண்களும், அடிக்கடி இருமலும், வாலிபத்தில் பலர் பார்ப்பதற்குப் பேரவா கொண்டு பயங்கச்செய்த தனங்களிரண்டும், இது தானென்று இளைஞா அறியுமாறு தோலாகித் தொங்கிய தனங்களுமுடைய தாய்க்கிழவி, என் கண்மணி ஏது புரிகின்றனை யென வினவிக்கொண்டு, ஆங்கு வந்தனள்.

மதனாபிஷேகம்:— அம்மா! சேடியர் தந்த சிற்றுண்டி யருந்தி, வீணை பயிலப் போகின்றேன்.

தாய்க்கிழவி:— கனநாட் டவமிருந்து கண்ட கண்மணியே! கரும்பே! கற்கண்டே! சில நன்மொழி புகலக் கருதிப் போந்தேன்.

மதனா:— யாது கருதினை? கழறு மம்மா!

தாய்க்:— அருமை மகளே! அறைவதைக் கேள். இன்று நினக்குப் போதிக்கப்போந்ததனைத்தும், நினது வாழ்நாட்களுக்கு இன்றியமையாததாம். நங்குலத் தொழிற்குத் துணைக்காரணமான அநேக தந்திரங்களை, அவசியம் அறியவேண்டிய தநேகமுளது. அவைகளனைத்தையும் அமைதியுடன் கேட்டு உளத்திற் பதியவை.

மதனா:— நஞ்சாதித் தொழிற்குரிய ஆடல், பாடல், அழகு முதலிய வனைத்தும் இளமை தொட்டே செவ்வனே யறிந்துளேனே. இன்னுமுணர வேண்டியதுளதோ? உளதேல் அவைகளை யோதுங்கள். (தொடரும்).

அவன்றனி ரகசி யந்தனைப் பகைவ ரறியவொட் டாமலு மவர்பா
லிவறுவ தாமி ரகசிய மதையோ ரெளிதினிற் றுனறி வுறலுங், தவமிகும்
ப்ரபுத்வ சத்தி யுத்சாக சத்திக டன்னிடத் துறவு, முவகைய திடனுன்
குபாயம தான்மற் றுலகர்தன் னிடத்தடங் கிடவும். (௨)

நான்குறு வருணர் நடைகளிற் சிறிது நலங்குறை யாமலுஞ் செங்
கோ, ருன்குறை வறச்சீர் தரச்செலுத் தினனல் தவிர்த்தரி மேதமுன்
யாகங், கோன்குலத் துரிமை கொள்ளுவ கொண்டு கொடைமுத்
தன்மமும் பலதன், வான்குல முயர்வை மருவிட வாற்றி வந்தனன்
மகிழ்தா நிலனே. (௩)

இத்தகைப் புகழ்கொ ளிறைபுரூ ரவனி னிசைகுண மெழிலா
சாண்மை, நத்துநந் நடைமுன் னலமெலாஞ் சுவர்க்க நாடுறு மூர்வசி
யறிவுற், றத்தகை யவனை யருமணங் கொளுமெண் ணுயின ளயனறிந்
தவளை, யெத்தகை நீயெண் ணேற்றனை யினிவிண் ணினைநில னேகெனச்
சபித்தான். (௪)

சாபமதேற்ற தக்கணத் தவளுந் தரை பெறத் தானினைந் துறும்,
பூபனை யணுகிப் புகழ்மணம் புரிந்தோ புரூரவ நீயெனைப் புரப்பாய், நீபரு
கிடவிந் நெய்யினை யளிப்பே னினைவினில் வேறுண நினைதல், யாபமிஃ
தெனைநேர் படுமுர ணங்கள் பாதுகாத் திடுவதுன் கடனே. (௫)

மற்றுள நீநிர் வாணியாம் பொழுது மகிழ்மறு மாதொடு புணர,
வுற்றவப் பொழுது முன்றனைப் பாரே னேதுமிச் குறிப்புக டவருப்,
பற்றுள னெனிலுன் பாற்பரி வுறுவன் பகரிவை களிற்றவ றுறிலொண்,
றற்றைநா ளுனைவிட் டகலுவ னுறுதி யாமிதிற் கென்பதி லுரைப்பாய். (௬)

என்னலு மதனுக் கிணங்கின ளுகி யிகன்மிகு முறுதிகள் கூறி,
மன்னவன் மோகத் தாசுறு நீதியாமெவை களுந்தனை யகல, மன்னவ
னவ்வூர் வசியுட னநேக வருடமொன் றுறுமனத் தவளு, யின்னய மார
விருந்தன னவளு மிவனிடத் தன்புற விருந்தாள். (௭)

ஆண்டுபெற் பலவன் னவணிலத் தமரா வந்தரத் திந்திரன் றனது,
மாண்டரு மவைக்கூர் வசியிலாக் குறைவால் வனப்பழிந் துளதென
வறிந்து, காண்டகு மவனைக் கண்டுகொண் டுறவக் கணமதிற் கந்தரு
வரைக்கூ, யீண்டுநீ ரவனிக் கேகியூர் வசியென் னெதிர்வரு மியல்புரிந் தி
டுவீர். (௮)

பூவர சரளும் புரூரவ னந்தப் புரத்தவ னுடனிருந் திடுவாள், மேவவ
டனைநீர் விரகுட னேகி விண்ணுற வரும்படி யன்னுண் மாலரு முயிர்நேர்
வருமுர ணங்கள் வருவழி செயிலவள் வருவா, ளாவது மிதுவே யாமென
வவரை யனுப்பின னுணைசெய் தவனே. (௯)

அவர்களு மந்த காரமா மிருள்சூ ழமையம்பார்த் துரணங்க டமையுங்,
கவர்கொடு கிளம்பிக் காயமீ துறுங்காற் கலித்தவ் வுரணங்க டாமு,
மெவர்தரு மொலிமென் றெழுந்தொலி யிதுவு மெனதுர ணங்களி
னொலியா, முவர்கந்த ருவரென் றூர்வசி யுணர்த லுற்றர சனையுட
னவண்கூய். (௧௦)

இறைவமற் றினியுன் னிடம்விடுங் கால மேற்றதிவ் விதம்வரு
மெனப்பன், முறைமுன முனது முன்மொழிந் துறுதி மொழியதுங்
சேட்டன னதையு, மறதிகொண் டனையுன் வாய்மொழி கேட்டேன்
மதியழி வுற்றன் யானு, மறைதரு மிடத்துன் னுலென தருமை யாருர
ணங்களு மிழந்தேன். (௧௧)

அவைகளைக் கள்வ ராகிக்கந் தருவ ரபகரித் தேகின ரந்தோ, வுவை
களெற் குறுஞ்சே யொத்ததென் பதைநீ யுணர்ந்திலை யாதரித் திவணைச்
சுவைகொடு வேறு தோகையைக் கூடித் தூங்குறுஞ் செயலதுற் றனையோ,
நவைதருங் கொடுமை நாயக னுனாய் நானுனை யடைந்துவீண் கெட்
டேன். (௧௨)

வேறு.

என்றழுகு மூர்வசியை யிறைவனறி யாமற்போய்ப்
பின்றொடரக் கந்தருவர் பெறுமாயை யான்மின்ன
லொன்றுறநிர் வாணியா யுறுமரசை யூர்வசிகண்
டன்றுசின மதிகரிக்க வவ்விடம்விட் டேகினளால். (௧௩)

கந்தருவ ரிவள்வருகை கண்டுமுர ணங்கடமை
யந்தவழி போட்டேக வரசனறிந் தவைகைக்கொண்
டுந்துதிகம் பரனுய்த்தன் னொருமனைபுக் கூர்வசியைச்
சிந்தைநினைந் துருகவவள் சென்றவிடந் தெரியாமல். (௧௪)

நிருவாணி யாயிங்ந நின்றதனாற் பிரிந்தனளோர்
தருமாடை புனைந்துறிலென் றனைநேர்வ ளென்றுடை
யுருவாகக் கொண்டுமுழு துலகுந்தே டினனாகிக்
குருநாடுற் றான்கண்டு கொண்டானூர் வசிமாதை. (௧௫)

கண்டதுமூர் வசியேநீ கடுகிச்செல் லாதேநில்
லண்டுமென தருமனைவி யன்றோநீ யெனைவிட்டு
மண்டுறுகற் பழிவுற்ற மாதைப்போ லேகுவதா
லுண்டுபிழை யாமுனக் கோர்பிழையுஞ் செய்திலையே. (க௬)

எப்போது முன்வயத்தி லிருந்தேன்மற் றனைநாடி
யிப்போது வந்துற்றே னெற்கொருதெய் வச்செயலாய்த்
தற்போது நேர்ந்தனையென் றனைவிட்டு நீயேகி
லப்போதி லென்னுயிர்போ மப்பழியை நீயுறுவாய். (க௭)

என்றழுது கூறிடுமவ் விறைவனையூர் வசிநோக்கண்
டன்றுரைசெய் வாணியென் னறிவிலியா வுன்னறிவெங்
கொன்றியது பெண்கட்கன் புண்டோவாண் பாலன்றோர்
ஆன்றியவன் பதுபுலிமான் றொடரான்போத் திடுமென்றே. (க௮)

இங்கிதைநீ யறியாம லிருப்பதுவு மாச்சரிய
மங்கையர்பா லுங்கள்வர் மருங்குமுயர் குலத்தாசன்
றங்குறவன் பினைநோராத் தன்மையல வோநீதி
பொங்குமதை மறந்தனைநீ போயிருமுன் னில்லாதே (க௯)

உன்மனைநீ யேகுகவென் றூர்வசியு தாசினமார்
சொன்மருவச் சொலுமொழியைத் தோன்றலுணர்ந் தவன்மோகந்
தன்மனது றத்துயரிற் றாழ்ந்தனனூர் வசிகாதை
வன்முனிகாண் மிகப்பெரிது மற்றிவண்யான் சுருக்கினனே. (௨௦)

பதிமூன்று மத்தியாயம் முற்றிற்று.

(ஆக செய்யுள் ௪௮௧).

காமேஸ்வரப் பிராண நாட்யை நம:

பதினான்கா மத்தியாயம்.

சுகோற்பத்தி வரலாறு.

சூதமுனி வரனுரைப்பான் றொன்முனிகாள் புரூரவனென்
றோதருமன் றுயாதுகொண் டுறச்செய்த வூர்வசிபின்
வேதவியா தன்மருவி விளங்குறுமாச் சிரமம்போய்க்
கோதறுமம் முனிவன்முனங் கூக்கிரலிட் டழுதனளால். (க)

மற்றவளைப் பார்த்தமுனி மாதிவள்விண் மாதாக
வுற்றிடுவா ளிவளோடிங் குறுவதுவுந் தகுதியல
சுற்றிவளை விடுவதுவுஞ் சுகுணமிலை யென்றுமனம்
பற்றவெது மறியாத பரிசுளனா யமருங்கால். (௨)

என்னமுடி வாமென்றே ரெழிலுருவ மேற்றன்னா
ளெண்ணியதோர் பத்திமிக வங்கணுலா வினளதைநேர்
கண்ணுறுவி யாதன்மிகக் காமமுற மயிர்ப்புளகம்
விண்ணுறம னங்காம மேற்செலவி டாதவனாய். (௩)

தன்னறிவாற் கூடும்வரை தானடக்க வடங்காம
லன்னவண்மோ கத்துள்ளா யமருங்காற் றுனியற்றும்
வன்னியினோர் செய்கைதனை வழுவாமற் செய்யுறுமெண்
மன்னவுறு மரணிதனின் மத்தைப்பூட் டிக்கடைந்தான். (௪)

அத்தருணத் திவன்வீர்ய மவ்வரணி யிற்சிதற
வித்தகையீ தனுசிதமென் றெண்ணாது மறுபடியு
நத்ததனை விடாதுசெய நாடுமர ணியினின்றோர்
புத்திரனு மற்றிவனைப் போலவெளி வந்தனனால். (௫)

புத்திரனைக் கண்ணுற்ற போதுவியா தன்களிகொண்
டித்தருணத் தரணிவரு மிவன் மிகவும் பரிசுத்த
வுத்தமனின் னோன்றனதோ ருற்பத்தி தானெவரு
மெத்தவியப் புறச்செய்யும் விடயமென வெண்ணுற்று. (௬)

அரணியுறு மக்கினியை யாங்குவெளி யாக்கவுமவ்
வுரமிகுமக் கினியவிசை யுட்கொண்ட போலவலந்
தரவுமதி கச்சுவாலை தானுறவெ ழுந்தெவனும்
பரவவதைக் காண்முனியும் பரமானந் தங்கொளவே. (௭)

அனுசிதமென் றெண்ணியதோ ரையமகன் றிடமேருத்
தனுவுடைய சிவபெருமான் றனதுவரப் பெருமைகொலோ
மனுவுருவா மகனுருவ மாதேசு மக்கினதா
னெனுமாறு விளங்கினனா லிவனேபுத் திரனாவன். (௮)

மகவியப்புற் றச்சேயை மருவியெடுத் தவண்மீண்டு
தகவுறுகங் கையின்முழுகித் தனதிடஞ்சென் றிங்குழவி
சுகவுருவ வூர்வசியாற் றோன்றியதென் றொருநாம
மிகவுலகிற் சுகனெனவே விளம்பிடவைத் தனனன்றே. (௯)

வேறு.

தூர்த்தன பூமழை துந்துபி நாத
மார்த்தனர் தேவ ரம்பைய ராடிப்
பார்த்தனர் கந்தர்வர் பாடின பாசி
சேர்த்தனர் நாரதர் சேர்முனி யாரும். (௧0)

உலகர் களிப்புற வும்பரி னின்று
மிலகு கமண்டல மின்புறு தண்ட
மலகில் புகழ்தரு மாசன முஞ்சீர்
பலகொள் வியாத பரன்முனம் வீழ. (௧௧)

சுகனது கொண்டு துலங்க வியாச
னகமகிழ் வோடன் னுற்குப நயனந்
தகவொடு செய்யத் தனயனும் வேதம்
பகருறு நூல்கள் படித்து வளர்ந்தான். (௧௨)

தன்னிகர் கல்வி தயங்குறு சேயை
மன்னுகு ருக்குல வாசம னுப்பி
யன்னவி டத்து மரும்பெரு நூல்கற்
றின்னய முற்றபி னில்லற தன்மம். (௧௩)

செய்தரு மெண்ணது சேரவி யாழ
னெய்தவி யாத னிவற்கரு நூல்கள்
பெய்தா வென்று பிறங்கும வன்பின்
மொய்தரு ஞான முதல்வனை விட்டான். (௧௪)

சுகப்பா னக்குரு சொற்படி கற்று
மிகப்பெரு நூலொடு வேதமு ணர்ந்து
சகப்புக ழார்குரு தக்கணை யீந்து
தகப்பனி டங்களி தந்திட வந்தான் (௧௫)

தந்தைம கன்பல சாத்திர மோர்ந்தே
வந்தன னென்று மகிழ்ந்து தழீக்கொண்
டுந்திய கல்வி யொழுக்க முசாவிச்
சிந்தை களிப்பது சேரவி ருந்தான். (௧௬)

பின்னர் மகற்கொரு பெண்ணைவி வாக
முன்னிவி யாதனு மூக்கம தாக
மன்னும ரும்புதல் வன்றனை நேர்கண்
டென்னொரு மைந்த விசைப்பது கேணீ. (௧௭)

தன்மமி ரும்பல சாத்திர மோர்ந்து
வுன்மன திற்குரை யோதலெ னையா
னென்மன மூங்களி யேறிடு மாறு
நன்மன மூற்று நலம்பெறு வாய்நீ. (௧௮)

இல்லற தன்மத் தெதையெதை நூல்கள்
சொல்லுறு மனையைத் துணைவியோ டாகி
வல்லை யியற்றி மகிழ்ந்துறு மென்னை
நல்வ ழிக்குற நாடுவை யின்னே. (௧௯)

மண்ணுல கிற்புகழ் மைந்தனி லார்க்கு
விண்ணுல கிற்கதி மேவுற வில்லென்
றண்ணிய நூல்க ளறைந்திடு மாலெற்
றெண்ணுறு மில்லற மேற்றுந லஞ்செய். (௨௦)

இல்லற தன்ம மியற்றிய பின்னர்
நல்ல தவஞ்செய நாடுவை யானும்
வல்லனு னைப்பெற மாதவ முற்ற
வெல்லைக ணக்கி லெடுக்கவொ ணாதே. (௨௧)
ஆதல யோநிச னாகவு மும்பர்
மேதகு ரூபம் விளங்கவும் வந்தாய்
நீதகு மில்லற நேர்ந்தெனை யாள்வாய்
மாதரை யென்று மகற்குரை செய்தான். (௨௨)

வேறு.

சொல்லிய வுரைக ளெல்லாஞ் சுகமுனி கேட்டுத் தந்தாய்
நல்லது நானுன் சேயாய் நண்ணினு நன்மார்க் கத்துட்
செல்லுமுத் தரவெற் கீந்தாற் செய்விருப் புறுவ னல்ல
தல்லதில் விருப்ப மேற லாவதெப் படியா மென்றான். (௨௩)

சொன்னதை யுணர்வி யாதன் சுகன்றனை நோக்கிப் பிள்ளாய்
யுன்னது நிமித்த மாயாண் டொருசத மருந்த வத்தா
லின்னலுற் றரனைப்போற்றி யிசையுனைப் பெற்றே னாத
லென்னதென் ணிற்கு மாறா யியற்றிடு மெண்கொ ளாதே. (௨௪)

உனக்கரும் பொருளி லாசை யுற்றிடி லரசன் முன்போ
யெனக்கரு நிதியைத் தாவென் றியாசக மாற்ற வேனு
நினக்குத விடுவே னீயு நின்மனை யோடு கூடி
வனக்குல முயா நீடு வாழ்குவை யென்று சொன்னான். (௨௫)

ஆங்கது கேட்ட பிள்ளை யையவிம் பனித வாழ்வ
தோங்குல கதில்வி சார முற்றிடா வின்ப மென்னு
மீங்கது வெதுநீ சாற்று மின்புமுன் னின்பம் போலாய்த்
தாங்கருந் துன்பைப் பின்னர் தந்திடு கின்ற தாமால். (௨௬)

பரம்பரை யாயித் துன்பம் படருமில் லறத்தைக் கல்வித்
தரம்பெறு மறிவோ ரின்பந் தானென வுரையார் மற்று
முரம்பெறு முன்சொற் கொண்டிங் கொருத்தியை மணக்கில் யானோர்
வரம்பினு ளாகி யன்னாள் வசத்துற வேண்டு மன்றோ. (௨௭)

மற்றவர் வயத்தற் கின்ப மருவுத லுண்டா வில்லை
சொற்றரு மதினும் பெண்பாற் சுழல்வயத் தவனுக்கின்ப
முற்றிடு மென்பதாக வோதல்விந் தையினும் விந்தை
பெற்றிடு மறிவிற் றாழ்ந்தோன் பெண்வயத் துழல நிற்பான். (௨௮)

இலங்கவன் மகன்பே ரன்சொ லிவர்களா கியவி ருப்பு
விலங்கினுட் கட்டாய் மற்றவ் விலங்கினை விடுவ தில்லை
மலங்கண்மூத் திரத்தாற் சேர வகுத்தபிண் டங்காண் டேசந்
துலங்கிது போல வேயத் தோகைக ளுடலு மாதோ. (௨௯)

இவ்வித வுடலுக் குண்டா மின்பமென் னிதில்வி ருப்ப
மெவ்வித மேனுங் கொள்ள விசையுறுன் வித்து வான்மற்
றெவ்வுமென் றந்தா யானும் யோனியிற் பிறந்தே னல்ல
னவ்வித வெனக்கிவ் வற்ப மார்செயற் ககங்கொளாதால். (௩௦)

ஆதலுன் சொல்லா லேகல் யாணமுற் றினியோ னிக்கு
ளோதரு மியான்பி றத்தற் குடன்படேன் மலமூத் ரத்திற்
போதரு மின்பி லாசை புகுமெனற் கிலையாத் மாவின்
பீதலை யனுப வித்தற் கென்றுமென் விருப்ப தாமே. (௩௧)

அவ்வித மாத்ம வின்ப வனுபவ முற்றே னாயின்
கவ்வுறு கருப்ப வாசங் காண்டுய ரனுப விக்கேன்
செவ்வனே யாத்ம வின்பந் திகழ்மறை முதல்யான் முன்ன
மெவ்வமி லாம லாசா னெதிரறி வுறவு ணர்ந்தேன். (௩௨)

இப்பொழு துன்பாற் சன்ம மேறுமார்க் கங்கள் சேருந்
தப்பிதங் கேட்க லானேன் றகப்பனா சிரிய னெற்கிங்
கெப்படி வாய்ந்தி ருங்க ளிருவர்தம் டாலு நன்மை
யொப்புறு மார்க்கங் காண லுற்றிடற் கில்லை யாதோ. (௩௩)

என்னது குருவே நீசொ லிச்சமு சார வாழி
தன்னினன் றாக மூழ்கித் தயங்கின னஃதஞ் ஞான
மன்னிய தன்றோ வன்னோன் மருவுமெற் கெங்ஙன் ஞானத்
தின்னய முரைக்கு யாற்ற வேற்பவ னாவன் மன்னோ (௫

தன்பிணி தணிக்காப் பண்டி தன்பிறர் பிணியை நீக்க
வன்புள னாவதெங்ஙன் மற்றது போலா மென்க
வென்புக லுவன்யா னானா விங்குனை நோக்க வன்றோ
வின்புள னாக வெண்ண மேற்றன னென்ன வென்னின். (௫

நத்திய சமுசாரத்து ணண்ணிய னாயி ருந்து
முத்தியை விரும்பெ னக்கு மொழியதற் கேது வாகும்
பத்திகொள் ஞான மார்க்கம் படர்நிலை யுரைத்த தன்றி
யித்திற முன்னைப் போல வியம்பிய தில்லை யன்னோன். (௫௬)

தந்தையா யிருந்து மின்ன றருங்கிர கத்த தன்மச்
சிந்தைகொ ளுபதே சத்தைச் செய்தனை யெனக்குத் தத்வ
விந்தைபா முபதே சத்தை விளம்பிச்சம் சார மாகும்
பந்தமீ துழலா வண்ணம் பார்ப்பதுன் கடன தன்றோ.

இச்சமு சார நேமி யெனவுழல் கின்ற பானு
வுச்சியிற் பகலி ராவு முழல்வதல் லாதி ளைப்பை
யெச்சம யத்து மாற வில்லையிச் சமுசா ரத்தை
நச்சினோன் றானு மங்க ணற்சுகங் காணற் கில்லை. (௫

எண்ணிடத் தின்ப மென்ப திதிற்சிறி தேனு முண்டா
மண்ணிடத் தார்பு ழுக்கண் மலத்திலன் புறுவ தோமோ
னுண்ணறி வில்லா மாந்தர் நுவலுமிச் சமுசா ரத்து
ளண்ணுமின் பாரெண் கொள்வ ரவரினு மூட ரில்லை. (௫

அவர் பன்றி நாய்கட் கொப்பா ரடைவதற் கருமை யாமித்
தவவுட றரித்து வேத சாத்திரங் கொடுசம் சாரத்
திவணுறும் பாசத் தாற்கட் டேறிலக் கட்ட றுத்தற்
கெவணதி திறத்த னாவ னிவ்வுல கதனின் மன்னோ. (

மனைவிமக் களிடத் தன்பு வாய்ந்தபண் டிதனிந் தப்பூத்
தனைவிட மேலு லோகந் தானிலை யெனுமயக்க
வினையிற்சொல் வானன் னோனை விடவறி வில்லா னில்லை
வினைவரி வையர்பாற் செல்லா நெறியன்பண் டிதன்மே தாவி. (௬

143404
600 008.

கலாநிதி சந்தா விபரம்.

உள் நாட்டிற்கு வருஷ சந்தா	....	ரூ 2—0—0.
,, சாஸ்வத சந்தா	....	ரூ 25—0—0.
வெளி நாட்டிற்கு வருஷ சந்தா	....	ரூ 3—0—0.
,, சாஸ்வத சந்தா	....	ரூ 30—0—0.
தனிப்பிரதி 1-க்கு	....	ரூ 0—4—0.

சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டிய விஷயம்.

சந்தாத் தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது V. P. யில் பணங்கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். எப்பொழுது சேர்ந்தாலும் அவ்வருடம் சித்திரை மாதம் முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு சித்திரை-மீ சஞ்சிகை முதல் அனுப்பப்படும்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும், மததூஷணை, துரைத்தன விரோதம் முதலியவைகளில்லாமலும் எழுதவேண்டும். வியாசங்களைக் கூட்டவுங் குறைக்கவும் ஆசிரியருக்குப் பாத்தியமுண்டு. பிரசுரிக்கப்படாத வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. வேண்டுவோர் தபாற்செலவை யனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும். வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

கடிதம் எழுதுவோர் நம்பரைக்குறித்துத் தெளிவான நடையில் எழுதவேண்டும்.

மானேஜர்,
"கலாநிதி ஆபீஸ்,"
தேத்தாகுடி வடக்குச்சேத்தி P. O.,
Via வேதாரணியம்.

Printed by Chinthamani Ammal at the "Edward Press," Tiruvarur
and published by R. Vaithiyanatha Sarma, Thethakudi Vadakkuchethi Post,
Via Vedaranyam.